பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 202 ஆனி 04ஆம் நாள் புதன்கிழமை 19 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
PhD / DBA
Doctor of Business Administration
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# அரச தலைவர் தேர்தல் நவம்பரில்

## நடவடிக்கைகளை ஆரம்பித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூன் 19
அரச தலைவர் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நவம்பர் மாதத்தில் 3 திகதிகளைத் தெரிவு செய்துள்ளது. அந்தத் திகதிகளுக்கான நிகழ்ச்சி நிரலும் நேற்றுமுன்தினம் ஆணைக்குழுவால் தயார் செய்யப்பட்டுள்ளது.
அரசமைப்பின்படி அரச தலைவர் தேர்தலை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் நடத்த வேண்டியுள்ளது. அதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது. தேர்தலுக்காக 3 திகதிகள் தெரிவு செய்யப்பட்டன. அந்தத் தினங்களுக்கான பணி அட்டவணையும் தயார் செய்யப்பட்டது.

21

# இனக் குரோதம் ஏற்படுத்தும் முயற்சியில் அஸ்கிரிய பீடம்

## முஸ்லிம் கடைகளை புறக்கணிக்குமாறு வரக்கொட ஞானரத்தன தேரர் கருத்து

கொழும்பு, ஜூன் 19
முஸ்லிம் வர்த்தக நிலையங்களைச் சிங்கள மக்கள் புறக்கணிக்க வேண்டும். அவர்களின் கடைகளில் சிங்கள மக்கள் உணவுகளை உண்ணக் கூடாது என்று தெரிவித்துள்ளார் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்கொட ஞானரத்தன தேரர்.

21



## மகா சபையின் கருத்தை ஏற்று நடந்தால் தவறுகளே ஏற்படாது

### இப்படிக் கூறுகின்றார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 19
ஆட்சியாளர்கள் மகா சங்கத்தினரின் ஆலோசனைகளை ஏற்று

21

## தயாசிறியை அழைக்க தெரிவுக்குழு உத்தேசம்

கொழும்பு, ஜூன் 19
உயிர்த்த ஞாயிறுத் தினத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக

07

## பரந்துபட்ட கூட்டணியூடாக மைத்திரி போட்டியிடுவார்

### சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 19
பரந்துபட்ட கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எதிர்க்கட்சித் தலைவர்

21

## முன்னைய முஸ்லிம் தலைவர்கள் போன்று தற்போது யாரும் இல்லை

### குற்றஞ்சாட்டுகின்றது பெரமுன

கொழும்பு, ஜூன் 19
நாடு சுதந்திரமடைந்த காலப்பகுதியில் தேசிய பிரச்சினைகளில் முஸ்லிம் சமூகத்தினர் வெகு

21

## குற்றஞ்சாட்டப்பட்ட சவேந்திர இராணுவத் தளபதியாகிறார்!

கொழும்பு, ஜூன் 19
இறுதிப்போரின் போர்க்குற்றங்களைப் புரிந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டுப் பன்னாட்டுச் சமூகத்தின் கடும் விமர்சனங்களுக்குள்ளாகியிருந்த இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின்

21

## கோத்தாவின் மனுக்களை நிராகரித்தது நீதிமன்றம்

### இன்று முதல் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 19
கோத்தபாய ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்சேபனை மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாது மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

21

## விமலின் மூளையை பரிசோதனை செய்க

### நாடாளுமன்றில் ரிசாத் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 19
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரு

07

## சிறையுள் 'செல்பி'; சிக்கினார் துமிந்த!



கொழும்பு, ஜூன் 19
பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்

06

## ஜே.வி.பிக்கு மகிந்த அணி ஆதரவு

கொழும்பு, ஜூன் 19
அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதற்கு மகிந்த அணியான பொது எதிரணி தீர்மானித்துள்ளது.
பொது எதிரணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று முற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில்

06

## கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுக் கூட்டம் நேற்று ரத்து!

21

## கெருடாவிலில் நேற்றும் 60 கிலோக் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19
தொண்டைமனாறு கெருடாவிலில் நேற்று அதிகாலை 60 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கஞ்சா

21

இப்பொழுது
75%
4G போனஸ்
ரூ. 49 ~~500MB~~
825MB
ரூ. 99 ~~1200MB~~
1650MB
4G
Google play
App Store
ஊடாக டவுன்லோட் செய்யுங்கள் அல்லது பிரவேசியுங்கள் www.datamart.lk
Sri Lanka Telecom
Mobitel
TRC/M/SEA/19/01

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
15 . 02 . 1949

இறப்பு
06 . 05 . 2019

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி கமலாதேவி சுந்தரலிங்கம்

எமது தாயாரின் பிரிவால் துயருற்று இருந்தவேளை எமது இல்லங்களுக்கு வந்து ஆறுதல் கூறி இரங்கல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, முகநூல் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிள்ளைகள்.**

**கலங்கரைச்செல்வி (லண்டன்), கலைச்செல்வி (லண்டன்), சங்கரலிங்கம் (இலங்கை), கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), கல்பனா(நியூசிலாந்து)**

**மணமகள் தேவை**

1977 இல் பிறந்த கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஆசிரியருக்கு 1981 இற்கு பின் பிறந்த மணமகள் தேவை.

**077 426 1868**

(NN 0087)(4.17)

**வீடு காணி விற்பனைக்கு**

யாழ் அரசடி வீதி 4ம்,5ம் ஒழுங்கைக்கு நடுவில் 3 1/2 பரப்பு காணி (46 Feet Road Front). புதிய வேலியுடன் விற்பனைக்கு. Rs. 25 மில்லியன். உரிமையாளர் -

xeylon.my@gmail.com 0775 58 55 33

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நகருக்கு அண்மையில் 3¾ பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**077 641 6985** (ACH/ 635) (11.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 . 03 . 1953

மறைவு
30 . 06 . 2018

## முத்தையா செல்வராணி

**திதி : 19.06.2019 துதியை**

ஆண்டொன்று ஆயிடினும் அன்பு முகம் மறக்கவில்லை
ஈன்று உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர் ! இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உம் பிரிவால் துயருறும் :
**சகோதரர்கள்.**

**முதலாம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
மணியகாரர் வீட்டடி, வேலணை.**

(CS 26102)(14.17)

# மரண அறிவித்தல்



பிறப்பு
16 . 11 . 1933

இறப்பு
17 . 06 . 2019

## தர்மலிங்கம் சிவக்கொழுந்து

காரைநகர் கொம்பாகொடை களபூமியைப் பிறப்பிடமாகவும், கொச்சிக்கடை பள்ளஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவக்கொழுந்து 17.06.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், பாலகிருஸ்ணன் (லண்டன்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் மகேந்திரன், தவமலர் (ஜேர்மன்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், லோகேஸ்வரி (லண்டன்), சந்திராதேவி (லண்டன்), பாலரூபன் (ஜேர்மன்), பத்மலோஜினி, இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், பரஞ்சோதி, புஸ்பநாதன் மற்றும் தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிவேதா, சந்தோஷ், கயாணன், குமுதினி, செந்தூரன், மதுஷாலினி, கிருஷ்நாத், கிருஷாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்கொழும்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/7, பள்ளஞ்சேனை,
**கொச்சிக்கடை.**

**தகவல்:**
த.மகேந்திரன் - 077 5917 433
த.பாலன் - 077 6436 393
பா. தவமலர் - 0049 1783 180 751

# மரண அறிவித்தல்



பிறப்பு
05 . 11 . 1978

இறப்பு
18 . 06 . 2019

## சுப்பிரமணியம் பகீரதன்

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் பகீரதன் 18.06.2019 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் ஆலய நிர்வாகியும் முன்னாள் செயலாளரும் ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்கள ஊழியருமான சுப்பிரமணியம்-தெய்வானை தம்பதியின் அன்பு மகனும், தனலட்சுமி, சந்தானலட்சுமி, கிருபாலட்சுமி, சோபனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலிங்கராசா, கணேசமூர்த்தி, அழகேசன், திலீப்குமார் ஆகியோரின் மைத்துனரும் யமுனா, கங்கா, தேவதேவன், தாரணி, கயனா, பிரதாபன், அர்ணன், கனிமொழி, கலைப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி கிழக்கு,
கைதடி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**
**வணிகத்தில் இரண்டாம் தேர்வு (வெளிவாரி)- 2016**
**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஆடி மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி ஆடி மாதம் வரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டையினை 02.07.2019 ஆம் திகதியிலிருந்து 05.07.2019 ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில்** பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ள முடியும்.

பதிவாளர்
17.06.2019

**வேலையாள்கள் தேவை**

நெல்லியடியிலுள்ள பலசரக்குக் கடைக்கு வேலையாள்கள் தேவை.

**077 360 3804**

**கடை வாடகைக்கு**

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தி, டயலொக் கொம்பனிக்கு முன்பாக இரண்டு கடைகள் மற்றும் களஞ்சிய அறை வாடகைக்கு உண்டு.

**077 047 6146**

**வீடு வாடகைக்குண்டு**

பருத்தித்துறை வீதி, மந்திகைப் பகுதியில் றெயின்போ ரைஸ்ஸ்ரோர்ஸ் கடையின் மேற்தளத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

**077 8695 418**

**ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்**

உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி

**IELTS**
• Unique Test Tips
• Latest course Materials

**IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

Dip.in English மற்றும் Spoken English கற்கைநெறிகளுக்கான மே மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun<br>10.00a.m | Mon,Wed,Fri<br>10.00 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**DMI COMPUTER EDUCATION**

| DMI COMPUTER EDUCATION | No.113, கன்னாதிட்டி வீதி சயன்ஸ் ஹோல் அருகாமை **யாழ்ப்பாணம்** Tel.: 021-222 4403 | **M.M.V.வீதி** (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) **நெல்லியடி** Tel.: 021-226 2470 | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் **சாவகச்சேரி** Tel.: 021-227 0775 | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் **சுன்னாகம்** Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) **கிளிநொச்சி** Tel.: 021-228 5655 | சீரணிச்சந்தி **சண்டிலிப்பாய்** Tel.: 021-225 5556 |
|---|---|---|---|---|---|---|






## மரண அறிவித்தல்



தோற்றம்
30 . 06 . 1953

மறைவு
17 . 06 . 2019

### திருமதி வாமதேவா விமலாதேவி (தேவி)

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாமதேவா விமலாதேவி (தேவி) 17.06.2019 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் விக்னேஸ்வரி தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்ற வாமதேவாவின் அன்பு மனைவியும் ஜவகர்லால் நேரு (டுபாய்) இன் அன்புத் தாயாரும் பவித்திராவின் அன்பு மாமியாரும் சாவித்திரிதேவி (கனடா), காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் வசந்தன், நந்தகுமார்(நந்தன் டிஜிட்டல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செந்தூரனின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.06.2019) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் மானிப்பாய் வீதியில் கோம்பயன்மணல் மயானம் அருகாமையில் அமைந்துள்ள "இன்பம் மலர்ச்சாலை" இல் வைக்கப்பட்டு பிற்பகல் 12.30 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பி.ப 2.30 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
நந்தன் - 0777734676
செந்தூரன் - 0777043561

(CS 26120)
(14,17)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### கந்தையா பத்மநாதன்

**(காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழிற்சங்கம் மற்றும் காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் தொழில் வல்லுநரும்)**

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கந்தையா பத்மநாதன் 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்க முன்னாள் தலைவர்) சகோதரரும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், பவானி (சுவிஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பிருந்தா மற்றும் ரதீபன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம், மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவிபன், மதுசன் ஆகியோரின் பேரனும், பூமணி, சண்முகதாஸ் (ஜேர்மனி), கிருஷ்ணபகவான் (சித்தவைத்தியர்), காலஞ்சென்றவர்களான சாரதா, தவராசா மற்றும் கணேசையா (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும், சத்தியதேவி (பிரான்ஸ்), தனேஸ்வரன் (ஜேர்மனி), லீலாவதி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் பத்மாவதி (பிரான்ஸ்), உமாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும், ராதா (யா/கனகரத்தினம் ம.ம.வி), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும், ஜனகன், ராகவன் (ஜேர்மனி), தாரணி (வ/வவுனியா தமிழ் ம.ம.வி), நிதர்சன், நிவேதா, கீர்த்தன் (கனடா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2019) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னமகால்,
கேணியடி ஒழுங்கை,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(CS/26126)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகமணி பரமலிங்கம்
### (கிளி)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமணி பரமலிங்கம் 14.06.2019 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசாரி மார்க்கண்டு சாரதாம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும், ரகுநாதன் (Swiss), ரவீந்திரன் (UK), ரஜந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யமுனா (Swiss), இமுதா (UK), கம்சா (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ் சென்றவர்களான நடராசா, கற்கண்டு சிவக்கொழுந்தார், தர்மலிங்கம், குலதுங்கம் மற்றும் தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதர ரும், காலஞ்சென்றவர்களான நாகேஷ்வரி, பரமேஷ்வரி, சற்குண தேவி, சிவராசா மற்றும் வள்ளியம்மை, தவமணிதேவி, காலஞ் சென்றவர்களான சுந்தரலிங்கம், தெய்வநாயகி, புஷ்பநாயகி மற்றும் குலசிங்கம், யோகநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாருஜன் திரன் (Swiss), டெல்பினா, திலக்ஷன் (UK) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2019) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

**T.P: 077 138 5266, 077 918 9480**



தோற்றம்
27.08.1942

மறைவு
14.06.2019

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர்
## அம்பலவாணர் சின்னத்தம்பி முருகேசு
(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்)



நெஞ்சம் மகிழ 14.10.1939

நெஞ்சம் நெகிழ 20.05.2019

சிந்தை சிதறிடவே எந்தை அவர் எமை விட்டு
முந்தை வினைப்பயனாய் முக்கண்ணன் கோடியை
விந்தைமிகு மானிடத்தின் சிறை மீண்டு அவர் சென்று
அந்தமில் ஆனந்தம் அடைந்தாலும் எம் மனது
நொந்து வெடிக்கிறதே உம் பிரிவுதனை வாட்ட
வந்து ஒரு வார்த்தை வாயாரச் சொல்லப்பா
உந்தன் மடிமீது உலாவந்த பிள்ளைகள் நாம்
வெந்தழலால் வேகின்ற மெய்யுருகும் நிலையாகி
சொந்தமும் சுற்றமும் துயரினால் துவழ்கின்றதே
வந்தனை செய்வோம் எந்தை அவர் ஆன்மா
இறை அடியிற் பேறு தந்தே.

கடந்த 20.05.2019 அன்று காலமான எமது குடும்பத்தலைவர் அமரர் அ.சி முருகேசு அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (19.06.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது பத்திரிகை வாயிலாகவும் தொலைபேசி வாயிலாகவும் பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் மற்றும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய பாடசாலைகள், உறவினர்களுக்கும் பூச்செண்டுகள் வழங்கியவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் தொலைத்தொடர்பு கொண்டோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சண்முகரத்தினம்
**(பாவிலார் ரத்தினம், கைதடிகிழக்கு)**



பிறப்பு 10.07.1953 — இறப்பு 18.06.2019

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகரத்தினம் நேற்று (18.06.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும் இராஜினி தேவியின் பாசமுள்ள கணவரும் பிருந்தா (பிரான்ஸ்), தர்மிகா, டிலக்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் தரணிதரன் (பிரான்ஸ்), ஜீவராசா ஆகியோரின் அன்பு மாமனும் கஜீன், திபிஷா, கவின், கவிகேஷன், ரெஷிகன், மிகிர்ஷன் ஆகியோரின் அன்பு பேரனும் கந்தையா, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், செல்லத்துரை, ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணபதிப்பிள்ளை பொன்னம்பலம், சிவசுப்பிரமணியம், நாகேஸ்வரியம்மா, யோகராணி, தவரஞ்சிதம், காலஞ்சென்ற பூவேந்திரராஜா மற்றும் தனவந்தராஜா, ஆனந்தராஜா, இந்திரராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (19.06.2019) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"விநாயகவாசா"
கைதடி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# பாலின் நிறம்

சூரிய ஒளியில் பார்த்தால் பால் வெண்ணிறமாகவே தெரிகிறது. ஆனால் பாலைச் சிவப்பு வெளிச்சத்தில் பார்த்தால் அது சிவப்பாகத் தெரியும். பச்சை வெளிச்சத்தில் பார்த்தால் அது பச்சையாகத் தெரியும். என் தெரியுமா? வெண்ணிறமாக காணப்படும். சூரிய ஒளி உண்மையில் ஏழு நிறங்களின் கலவையாகும். ஊதா, கருநீலம்,நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என்பன அவையாம். ஒரு பொருள் எந்த நிறத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறதோ அந்த நிறத்தைக் கொண்டதாக எமது கண்ணுக்குப் புலனாகிறது. பாலின் மூலக்கூற்று அமைப்பு சூரிய ஒளியின் எந்த நிறத்தையும் தனியாகக் காண்பிக்காமல் அனைத்து நிறங்களையும் ஒருங்கே பிரதிபலிக்கச் செய்கிறது. அதனால் தான் பால் வெண்ணிறமாகக் காணப்படுகிறது.

# சிந்தனை விருந்து

- எவருடைய குறைகளை எண்ணிவிட முடி யுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனி தர்.
- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்.
- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரி யாது. பணம் இல்லாவிட்டால் எவருக்கும் உன்னைத் தெரியாது.
- சில நேரங்களில் புத்தி வெற்றி பெறுகிறது. பல நேரங்களில் வெற்றியே புத்தியாகி விடுகிறது.
- மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாக சிந்திப்பது.ஆனால் முட்டாள் தனமாகச் செயற்படுவது.
- முட்டாளைச் சமாளிக்க சுருக்கமான வழி மௌனமாக இருப்பதுதான்.
- அருகில் இருக்கும் போது கோபுரங்கள் கூட உயரமாகத் தெரிவதில்லை. தூரத்தில் இருக் கும் போதே பிரமாண்டமாகத் தெரிகின்றன.
- நன்றாகப் பேசுவது நல்லதுதான். ஆனால் அதனிலும் நல்லது நன்றாகச் செய்வது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கலாவதி கோணலிங்கம்



பிறப்பு 06.02.1971 — இறப்பு 18.06.2019


யாழ் வண்ணார்பண்ணை காரைக்காடு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி கோணலிங்கம் நேற்று (18.06.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினவேலு மற்றும் சொர்ணம் தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாமற்றும்அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் கோணலிங்கம் (அக்ஷா நகைமாடம்,யாழ்) அவர்களின் பாசமிகு மனைவியும் தன்யாஸ்ரீயின் அன்புத் தாயாரும் கோமதி (சுவிஸ்), திலகவதி (பிரான்ஸ்), யோகசந்திரன் (சுவிஸ்), புஸ்பமாலா (காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்) Dr.விமலன் (இறாகம வைத்தியசாலை), ஆகியோரின் அன்புச்சகோதரியும் வரதராஜன், ரஞ்சிதகுமார், இரகுநாதன், ஜெயராமன், இராமச்சந்திரன், ஸ்ரீனிவாசன், சந்தானலட்சுமி, சரஸ்வதி, இராமமூர்த்தி, இரவீந்திரன், ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரியும் விக்னேஸ்வரன், முரளிதரன், இளஞ்செல்வன், இந்திரகுமாரி, Dr. சுதர்சினி, கோமளா, புஸ்பராணி, திருச்செல்வம், ஜெயராணி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அனுஷா, அனுநிதன், அட்ஷயா, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு சிறியதயாரும் அபினேஷ், அஸ்மிகா, நதுஷா, அக் ஷா, பவன்அஷ்வின், தாருகேஷ், ஐஷ்வந்தி, விகாஷ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.06.2019 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:R. கோணலிங்கம் (கணவர்) 0771234643,**
**Dr.R.விமலன் 0773627043**

## தியாகராசா கிருஷ்னசாமி (வீரர்)



25, சிவகுருநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும்ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா கிருஷ்னசாமி (வீரர்) யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன் (1955 ஆம் ஆண்டு கிரிக்கெட் அணியின் தலைவர்) 17.06.2019 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா-இராசமணிதம்பதிகளின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மனோன்மனி, பாலசிங்கம் மற்றும் மயில்வாகனம் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் புனிதமனி, கந்தசாமி (சிறி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோபிநாத் (ஆஸ்திரேலியா), பிறேம்நாத் (கனடா), விஸ்வநாத் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/3, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
077 935 3081

தகவல் : மருமகன்,
பாலசுந்தரம் விஜயரத்தினம்
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
கோபிநாத் 006198094691 / பிறேம்நாத் 0014167071390/
விஸ்வநாத் 0044 203 643 9418

**Chundikuli Girls' College**
**Old Girls' Association, Jaffna**

**Annual General Meeting and Fellowship Lunch**

Date : Saturday, 22 nd June. 2019
Venue : College Hall
8.30 a.m : Holy Communion & Worship Service at St.John the Baptist's Church
11.00 a.m : A.G.M
12.30 p.m : Lunch

**Lunch Tickets - Rs.400/=**
**All Old Girls are cordially invited**

*Secretary.*

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 . 04 . 1957

இறைவன் அடியில் 05 . 07 . 2012

**அமரர் தர்மலிங்கம் கனகலிங்கம்**
**(முன்னாள் உதவி முகாமையாளர் மக்கள் வங்கி சுன்னாகம் கிளை)**

அன்பு அப்பா ! ஆண்டுகள் ஏழு சென்றதுவே
இந்நாளில் ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

லைமன் லேன்,
லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராசையா



பளையைப் பிறப்பிடமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசையா (முன்னாள் மேலதிக மாவட்டப் பதிவாளர்) 17.06.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி** (ACH/6834)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 227 0653**



### திருமதி மனோன்மணி (கிரிஜா) சுவேந்திரன்

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சுவேந்திரன் (கிரிஜா- ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) நேற்று (18.06.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுவேந்திரனின் அன்பு மனைவியும் குகசாம்பவியின் (மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி) அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் இன்று (19.06.2019) புதன்கிழமை பி.ப 2.00 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தம்பனை வீதி, அரசடி,**
**வடலியடைப்பு**

**தகவல்: குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் விவசாய பீடத்தின் விவசாய இரசாயனவியல் துறையின் விரிவுரையாளருமான **திருமதி அம்பிகை சயந்தன்** அவர்களின் அன்புத்தாயாரான

திருமதி
**யோகராணி சிவஞானம்**


அவர்கள் கடந்த 17.06.2019 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## மரண அறிவித்தல்கள்

### இராமகிருஷ்ணன் பாலச்சந்திரன்

**(ஓய்வு ஸ்ரீலங்கா ரெலிகொம்)**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கற்குளி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமகிருஷ்ணன் பாலச்சந்திரன் கடந்த (17.06.2019) திங்கட்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் ஜெயந்தியின் (ஆசிரியர், யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகைவித்தியாலயம்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற இராமகிருஷ்ணன் மற்றும் கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரத்தினராசா (ஓய்வுபெற்ற நகரசபை செயலாளர்) மற்றும் நகுலேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் சோபிகா (ஆசிரியர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி), நிஷாந்தன் (பிரான்ஸ்), தபோதரன் (மாணவன்,ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுதர்சன், (பிரதேச செயலகம், சாவகச்சேரி), சுரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும் சு.ரஜித், சு.துஷான், சு.அகரன், நி.அஸ்மிதா, நி.அம்ஸிகா ஆகியோரின் பேரனும் சுகுமாரி, இராசேந்திரன், நேசமலர், தினதயாளன் (லண்டன்), சிறிதரன், கிருஷ்ணகுமார், ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவளகேசரி மகாலிங்கம், திலகம், குமுதினி, தனஜா, லோஜனா, தயாநிதி, கலாநிதி, விஜயாநிதி, நகுலேஸ்வரன், சுதாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2019) புதன் கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 227 3283**

**கற்குளி வடக்கு, சாவகச்சேரி**



பிறப்பு 06 . 03 . 1938

இறப்பு 16 . 06 . 2019

### திருமதி மரியறோசா கஸ்பார்
**(பொன்னுத்துரை கமலம்)**

நவாலியைப் பிறப்பிடமாகவும் குருநகர், அடப்பன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரியறோசா (கமலம்) கஸ்பார் 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - பூமணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கஸ்பார் (பொன்னுத்துரை) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அவுறான் அன்னம்மா தம்பதியரின் மருமகளும் ராணி, தாசன் (சீலன் சலூன் உரிமையாளர்), துரை (சுவிஸ்), வின்சன், சீலன், யோண் (சுவிஸ்), வசந்தா, ஜெனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமலிங்கம், வைத்திலிங்கம், நடராசா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அடைக்கலமுத்து, மாலா, ஞானம் (சுவிஸ்), கவிதா (சுவிஸ்), அமலன், சாந்தகுமார் (வலி.தெ.மே.பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதா, தாஸ், யோகேஸ், கெவின், தனுசன், சதீஸ் (சுவிஸ்), அனுஷியா (ஆசிரியர் - வ/ஓமந்தை ம.க), சர்மிளா, நிரோசா, எற்வின், ஆகனியா (சுவிஸ்), நியூட்டன் (சுவிஸ்), அபி (சுவிஸ்), டனிஸ் (சுவிஸ்), அனிஸ்ரா, நிஷாந்தினி, அனோஜன், டெனிஸ்ரன், மேனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துபிஷா, பிரதீஸ், கவ்றோன், தாமீக்கா, துசாரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை (20.06.2019) வியாழக்கிழமை பிப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.10/2, அடப்பன் வீதி,**
**2ஆம் ஒழுங்கை,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சிறையுள்...

பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் 'செல்பி' ஒளிப்படமொன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

சிறை அறைக்குள் இந்த ஒளிப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முகநூலில் பதிவொன்றை இட்டுள்ள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அனைத்துத் துறைகளின் கவனத்துக்கும். நீதி அமைச்சர் தலதா அத்துகோரள மற்றும் ஹிரு தொலைக்காட்சி அறிந்து கொள்ளவும். சிறையிலிருந்து காணொலி அழைப்பின் மூலம் தனது வர்த்தகத்தைச் செய்யும் பிரபல கைதியை அடையாளம் தெரியுமா? புகைப்பட உதவி சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு என்று குறிப்பிட்டுள்ளார்.

(எ-22)

## ஜே.வி.பிக்கு...

நடைபெற்றது. அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்க வேண்டாம் என அரச தலைவரிடம் கோரிக்கை விடுப்பதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது ஜூலை மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெற்று 10ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

(எ-22)

## விடுகதை

1. அனைவரையும் நடுங்க வைப்பான். ஆதவனுக்கே அடங்குவான். அது என்ன?
2. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?
3. அடி மலர்ந்து நுனி மலராத பூ - அது என்ன ?
4. ஆயிரம் தச்சர் கூடி கட்டிய அந்த அழகான மண்டபம், ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் அந்த மண்டபம். அது என்ன?
5. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன?
6. தலையில் கீரீடம் வைத்த தங்கப் பழம் அது என்ன?
7. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
8. ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல; சூடு கொடுக்கும், தீ அல்ல; பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன?
9. அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
10. கந்தல் துணிக்காரி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்?

## விடைகள்

1. குளிர்
2. மின்விசிறி
3. வாழைப்பூ
4. தேன் கூடு
5. தண்ணீர்
6. அன்னாசிப்பழம்
7. இதயம்
8. சூரியன்
9. நிலா
10. சோளப்பொத்தி

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ 39 வயதுடைய சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் பெரிதும் எதிர்பார்ப்பில்லை.

தொடர்புகளுக்கு: **077 905 8615 (Viber)**

**வேலையாள்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாள்கள் தேவை.

**T.P: 076 622 1402**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 4/9, பாடசாலை வீதி, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச் சபைக்குட்பட்ட வட்டாரம் - 06 பாடசாலை வீதியிலுள்ள இல. 4/9 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு சொரியலாக **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரியும். வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியமும். வேலுப்பிள்ளை பரமசாமியும். வேலுப்பிள்ளை இராசதுரையும்** சொந்தக்காரர்களாகவிருந்து குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப. இராசகுரு முகதாவில் நிறைவேற்றபட்ட 1206/03.06.1987 ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**சிவகுரு விமலச்சந்திரனும் பெண் சிறீராஜினியும்** பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6222/16.09.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை இராசதுரையும் பெண் நிர்மலாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**மகேந்திரராசா கைம்பெண் நவலோஜினி** பிரசித்த நொத்தாரிசு வை. சுபாஸ்கரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 110/11.02.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவகுரு விமலச்சந்திரனும் பெண் சிறீராஜினியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**மகேந்திரராசா கைம்பெண் நவலோஜினி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மகேந்திரராசா கைம்பெண் நவலோஜினி** ஆகியோரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(cs.26125) (13.17)



## கவிதைப் போட்டி

05.06.2019 அன்று வெளியான கவிதைப் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2009 இறுதி யுத்தத்தின் போது பெற்றோர் மற்றும் வாழ்க்கைத் துணைவர்களால் இலங்கை இராணுவத்தினரிடம் பலர் கையளிக்கப்பட்டனர். ஆனாலும் இதுவரை அவர்களுக்கு என்ன ஆனது என்பது யாரும் அறியாத ஒன்றாகவே இருக்கிறது.

இறுதிப்போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல்போன உறவுகள் எங்கே?

2009 மே 18 இறுதிப்போரின்போது இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றி 48 வரிகளுக்கு மேற்படாமல் கவிதை வடித்து அனுப்புங்கள்

உங்கள் கவிதைகளை thamilini.kulen@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது

Thamilini
90, High Street, London SW19 2BT, United Kingdom

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பரிசுகள்:**

முதல் பரிசு ரூபா 5000.00
இரண்டாம் பரிசு ரூபா 3000.00
மூன்றாம் பரிசு ரூபா 1500.00
ஆறுதல் பரிசுகள் 10 தலா 500.00

**முடிவு திகதி : 30.07.2019**

இலண்டன் தமிழினி பத்திரிகை நிறுவனத்தால் நடத்தப்படும் இப்போட்டியில் ஆசிரியரின் முடிவே இறுதியானது.


## விமலின்...

மான விமல் வீரவன்சவின் மூளையைப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் சபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எனது தாயாரின் சகோதரர் ஒருவரின் உறவினர் தெமட்டகொடையில் நடந்த வெடிப்புச் சம்பவத்துக்குக் காரணம் என விமல் வீரவன்ச இங்கு குற்றஞ்சாட்டியுள்ளார். எனது தாயாருக்கு சகோதரர்கள் கிடையாது. தொடர்ந்து பொய்களைக் கூறிவரும் விமல் என் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்த முறைப்பாட்டையும் இதுவரை செய்யவில்லை. அவரின் பொய் அளவில்லாமல் போய்க்கொண்டுள்ளது. என் மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கின்றேன். இப்படி பொய் சொல்லும் விமலின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ-22)


## விற்பனைக்கு

**அச்சகத்திற்குரிய இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு**

- Offset Printing machine (KORA)
- Paper Cutter Machine (Polar Programs 30')
- Plate Maker
- Plate Developer Machine (Silverlitn)
- Panger Machine

.தொடர்புக்கு : 077 592 5096



## பதவி வெற்றிடம்

**Electrician வீட்டு வயரிங்** தெரிந்த (அனுபவம் உள்ள) வேலையாள்கள் தேவை.

**யாழ்ப்பாணம் - 02 பேர் (ஆண்)**
**வவுனியா - 02 பேர் (ஆண்)**
**மட்டக்களப்பு - 02 பேர் (ஆண்)**
**கொழும்பு - 02 பேர் (ஆண்)**

தங்குமிட வசதி உள்ளது.

தொடர்பு:
**Micropc Systems**
**115C, W.A.Silva Mawatha, Colombo - 06**
**077 307 6409/ mail@micropcsystems.com**

(C 10475)(04.17)



## Summit Lanka Pvt Ltd. நிறுவனத்தினால் நடைபெறும் நேர்முகத் தேர்வு

**Qatar** நாட்டுக்குச் செல்ல காத்திருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். இதற்கான நேர்முகத் தேர்வு **வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும்.**

**மேலதிக விவரம் :- 076 071 9075, 077 999 9092**

| Sl. No | Category | Qty. | Salary |
|---|---|---|---|
| 01 | Mason | 10 | 950 + 250 |
| 02 | Shuttering Carpenter | 10 | 900 + 250 |
| 03 | Steel Fixer | 10 | 900 + 250 |
| 04 | Diesel / Hydraulic Mechanic | 02 | 1100 + 250 |
| 05 | Machinist / Turner | 02 | 1150 + 250 |
| 06 | Tig & Arc Welder (SS 6G) | 06 | Joining wages (850+250)<br>After Trade Test (1650+250) |
| 07 | Tig & Arc Welder (CS 6G) | 06 | Joining wages (850+250)<br>After Trade Test (1500+250) |
| 08 | Mig Welder | 10 | Joining wages (750+250)<br>After Trade Test (1100+250) |
| 09 | Arc Welder 3G | 10 | Joining wages (750+250)<br>After Trade Test (1000+250) |
| 10 | Industrial Spray Painter / Sand Blaster | 06 | Joining wages (750+250)<br>After Trade Test (1000+250) |


## தயாசிறியை...

அதிர்சித் தகவலை வெளியிட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகரவிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உத்தேசித்துள்ளது என்று அறிய முடிகின்றது.

நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த தயாசிறி, தற்கொலைதாரிகள் ஏன் தாஜ் சமுத்திரா விடுதியில் குண்டு வெடிப்பு நிகழ்த்தவில்லை?

அந்தச் சமயத்தில் அங்கிருந்தவர்கள் யார்? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்த நேரம் அங்கிருந்த பெரும்புள்ளிகள் யார் என்பதை அறிந்து கொண்டால் சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்களை அறிந்து கொள்ள முடியும் என்றும், அனைத்தையும் அறியும் ஊடகவியலாளர்கள் அதையும் அறிய முயலவேண்டும் என்றும் தயாசிறி குறிப்பிட்டிருந்தார்.

தயாசிறியின் இந்தக் கருத்து கொழும்பு அரசியல் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது.

அதனால் அவரை அழைத்து இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு உத்திதேசித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

(எ)


Congratulations

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

**பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய செங்கைப்புரவோன்**

உயர்திரு. **இராசையா குவேந்திரநாதன்** அவர்களின் தன்னலங்கருதாச் சேவையினைப் பாராட்டி

**12.05.2019 அன்று கனடா குருவி அமைப்பினால்**
**"புதிய வெளிச்சம்"**
எனும் விருதினை
கனடாவில்
பெற்றுக்கொண்டமைக்கும்

**19.05.2019 அன்று யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் (கனடா) குமரன் விளையாட்டுக் கழகம் கனடாக் கிளையும் இணைந்து வழங்கிய**
**"கொடை மதி"** எனும் பட்டத்தினை
கனடாவில் பெற்றுக்கொண்டமைக்கும்

**16.06.2019 அன்று தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் இந்தியாவின் குளோபல் பீஸ் யுனிவேசிற்றியினால் சிறந்த சமூக சேவைக்கான கௌரவ**
**"கலாநிதி"** பட்டம்
பெற்றுக்கொண்டமைக்கும்







அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்

**உரிமையாளரும், ஊழியர்களும் - விஸ்ராவிசன், யாழ்ப்பாணம்**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வங்குரோத்து அரசியல்


அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரிசாத் பதியுதீனின் தாயாரின் சகோதரர் ஒருவரும், ஈஸ்டர் தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார் என்று மிகப்பிந்திய புரளியைக் கிளப்பி விட்டிருந்தார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச. இந்த விசக் கருத்துக்கு நேற்றுக் தக்க பதிலடி கொடுத்துள்ளார் ரிசாத். “எனது தாயாருக்கு உறவினரே இல்லை. இவ்வாறிருக்க விமல் வீரவன்ச எனது தாயாரின் உறவினர் ஒருவர் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபடுகின்றார் என்று குறிப்பிடுவது ஏன்?. தேசிய அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் விமல் வீரவன்ச போன்றவர்கள் இவ்வாறான கருத்துக்களைத் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருவது எதற்காக?” என்றும் கேள்வியெழுப்பியுள்ளார் ரிசாத் பதியுதீன்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது முதல் இன்று வரையில் மகிந்த அணியினர் படுகேவலமான, இழிவான, கடைநிலையான, காட்டுமிராண்டித் தனமான வங்குரோத்து அரசியலைத்தான் செய்து வருகின்றனர். அடுத்தடுத்துத் தேர்தல்கள் வரவிருக்கின்ற நிலையில் தத்தமது வாக்குவங்கிகளைத் தக்கவைக்கவும் பெருக்கிக்கொள்ளவும் ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தைக் கையிலெடுத்துள்ளனர் அவர்கள். மக்கள் எப்பாடு பட்டாலும் பரவாயில்லை, நாட்டின் பாதுகாப்பு எந்த நிலையில் இருந்தாலும் பரவாயில்லை, பன்னாட்டுச் சமூகத்தின் பார்வை இலங்கை மட்டில் என்ன கட்டத்தில் இருந்தாலும் பரவாயில்லை அவர்களுக்கு முக்கியம் தேர்தல், வாக்குகள், வெற்றி என்பதே.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் மகிந்த அணியின் வியூகம், களச் செயற்பாடு அனைத்தும் இவ்வாறே அமைகின்றது. அத்துரலிய ரத்ன தேரரின் உணவு ஒறுப்புப் போராட்டமும் கூட அதே வகையறாதான்.

ரிசாத் மீதும் அவர் சார்ந்த சமூகத்தினர் மீதும் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை அடுக்கிவரும் மகிந்த அணியினர், குறிப்பாக விமல் வீரவன்ச, எஸ்.பி.திசநாயக்க போன்றோர் இன்னமும் தமது குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்கள் எதனையும் முன்வைக்கவில்லை என்பது இங்கு குறித்து நோக்கத்தக்கதாக அமைகின்றது. தாம் சொல்வது உண்மைதான் என்றால், உண்மைக்குப் புறம்பில்லை என்றால் அவர்கள் முதலில் ரிசாத் மற்றும் ரிசாத் போன்றோருக்கு எதிராக முறைப்பாடுகளையல்லவா பதிவுசெய்ய வேண்டும். அதுவே தேசியப் பாதுகாப்பிலும், நல்லிணக்கத்திலும் அக்கறையுள்ள ஒரு மக்கள் பிரதிநிதி செய்யத்தகுந்த செயல். அதைவிடுத்து தாய் நாட்டையும், அதன் பேரவலத்தைத் தன் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட முற்படுவது பெற்ற தாயை நடுத்தெருவுக்குக் கொண்டு செல்லும் செயலேயன்றி வேறொன்றும் இல்லை.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் முன்னால் முன்வைக்கப்படும் சாட்சியங்கள், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை குற்றவாளியாக அடையாளப்படுத்துகின்றன. இவ்வாறிருக்கையில் அது தொடர்பான கருத்துப் பகிர்வுகளை மகிந்த அணியினர் தவிர்ப்பது ஏன்? தேர்தலில் கூட்டு அமைப்பது தொடர்பில் மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மகிந்த தலைமையிலான பொது மக்கள் முன்னணிக்கும் இடையில் தற்போது பேச்சு நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் ரிசாத்தை மட்டும் மகிந்த அணியினர் குறி வைப்பது சிதம்பர ரகசியம் ஒன்றுமல்லவே!, இனவாத அரசியல்வாதிகள் முன்வைக்கும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான கருத்துக்களின் நோக்கம் மலையில் ஏற்றிவைத்த தீபம் போன்று வெளிப்படையாகவே தெரிகிறது. மக்களும் இதைச் சரிவரப் புரிந்துகொள்ளவேண்டும். நிலமையைக் கண்ணியமாகக் கையாள வேண்டும்.



# சமூகப் பிளவைத்தான் பயங்கரவாதிகள் எதிர்பார்க்கின்றனர்

ஈஸ்ரர் ஞாயிறு வெடிகுண்டு தாக்குதல்களுக்குப் பிறகு இலங்கையில் முஸ்லிம் சமூகம் மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்கள், சொல்லாடல்களால் மனம் புண்பட்டு அந்தச் சமூகத்தைச் சேர்ந்த இரண்டு மாநில ஆளுநர்களும், 9 அமைச்சர்களும் பதவி விலகியிருப்பது இலங்கையில் புதிதாக உருவாகி வரும் பிளவை வெளிப்படுத்துகிறது.

“அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகிய இரு ஆளுநர்களும், ரிசாத் பதியுதீனும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக விசாரணையில் குறுக்கிடுவதால் பதவி விலக வேண்டும்” என்று தீவிர பௌத்தக் குழுவினர் வலியுறுத்தலாயினர். இவர்களுடைய பதவி நீக்கத்தை வலியுறுத்தி பௌத்த பிக்கு அத்துரலிய ரத்ன தேரர் காலவரையற்ற உணவு தவிர்ப்பு போராட்டத்தை கண்டி நகரில் மேற்கொண்டிருந்தார். அவர் உணவு ஒறுப்பு இருந்தபோது ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் அவருக்கு ஆதரவாக ஊர்வலமாகச் சென்றனர். தங்கள் மீது சுமத்தப்பட்ட அவதூறையும் அது உண்டாக்கிய மன அழுத்தத்தையும் வெளிப்படுத்தும் விதத்திலேயே இந்தப் பதவி விலகல் நடவடிக்கையை எடுத்திருக்கின்றனர் முஸ்லிம் பிரதிநிதிகள்.


> “ஈஸ்ரர் நாளன்று நடந்த குண்டுவெடிப்பில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இது தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணை தொடர்கிறது. ஆனால், இந்தத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அரசைக் கண்டிப்பதற்குப் பதிலாக, முஸ்லிம் சமூகத்தைக் குறிவைக்கும் நடவடிக்கைகளில் சில பௌத்தக் குழுக்கள் இறங்கின. முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், வணிக வளாகங்கள், மசூதிகள் தாக்கப்படுகின்றன.

**அரசுக்குப் பதிலாக முஸ்லிம் சமூகம்**

உயிர்த்த ஞாயிறு நாளன்று நடந்த குண்டுவெடிப்பில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இது தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை தொடர்கிறது. ஆனால், இந்தத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அரசைக் கண்டிப்பதற்குப் பதிலாக, முஸ்லிம் சமூகத்தைக் குறிவைக்கும் நடவடிக்கைகளில் சில பௌத்தக் குழுக்கள் இறங்கின. முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், வணிக வளாகங்கள், மசூதிகள் தாக்கப்படுகின்றன. தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராகப் பொய்யான செய்திகளும், ஆதாரமற்ற வதந்திகளும் பரப்பப்படலாயின. ‘முஸ்லிம் மருத்துவர்கள் சிகிச்சைக்கு வரும் சிங்களப் பெண்களை மலடாக்குகிறார்கள்’ என்பது போன்று ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகப் பரப்பப்படும் வதந்திகளும் கதைகளும் சிங்களவர்கள் - முஸ்லிம்கள் இடையே பரஸ்பர அவநம்பிக்கையையும் வெறுப்பையும் உண்டாக்கத் தொடங்கியிருக்கிறது.

**அரசே அனுசரணையா?**

இது போன்ற சந்தர்ப்பங்களில் அரசுதான் உடனடியாகக் களம் இறங்கி, மக்களிடையே பழைய பிணைப்பைக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஆனால், தங்கள் மீது திரும்ப வேண்டிய கோபம் முஸ்லிம்கள் மீது திருப்பப்படுவதை இலங்கை அரசு ரசிக்கிறது. செல்வாக்கு மிக்க பௌத்த பிக்குகளைப் பகைத்துக்கொள்ள வேண்டாம் என்று அது நினைக்கிறது. விளைவாக, பிக்குகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் சாதிக்கின்றனர் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும்.



**எச்சரிக்கை வேண்டும்**

ஓரிடத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடக்கும்போது அங்கே தாக்குதல் நடத்துபவர்கள் முதலில் குறிவைப்பது பொது அமைதிக்கும் நல்லிணக்கத்துக்கும்தான். பிளவை எதிர்பார்த்துதான் அவர்கள் கெடுதிகளைத் தொடங்குகிறார்கள். சமூகப் பிளவு நோக்கி நகரும்போது, மறைமுகமாக நாமும் பயங்கரவாதிகளுக்கு உதவுகிறோம் என்ற பிரக்ஞை சமூகத்துக்கும் வேண்டும்!

*நன்றி : தி ஹிந்து*

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM
புதன்கிழமை 19 ஜூன் 2019


## இன, மத வாதத்தை முன்வைத்து அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி

### கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 19

அடிப்படைவாத அரசியல் குழுக்கள் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி தம்மிடம் இருந்து பறிபோன அதிகாரங்களை மீள பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றன. அதற்கொருபோதும் இடமளிக்க முடியாது ஒரு இனத்தவர் அடிப்படைவாதியாக செயற்பட்டால் அதன் விளைவு ஒட்டுமொத்த இனத்துக்கும் தாக்கம் செலுத்தும்.

இவ்வாறு கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற செயற்திட்டத்தின் கீழ் குருநாகல் சாஹிரா பாடசாலையில் அமைக்கப்பட்ட இரு மாடி தொழினுட்ப கட்டட திறப்பு விழா நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் பல்லின சமூகமும் வரலாற்று காலத்தில் இருந்து சகோதரத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள். இனங்களுக்கிடையில் உள்ள நல்லிணக்கம் அரசியல் நோக்கங்களின்றி முறையாக தொடர்ச்சியாக வளர்ச்சியடைய வேண்டும். ஒரு இனத்தவர் பொருத்தமற்ற அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுப்பட்டால் அந்த முழு இனமுமே பாதிக்கப்படும். இதன் விளைவு அனைவருக்கும் தாக்கத்தைச் செலுத்தும்.

தற்போதைய சூழ்நிலையை அனைவரும் மிகவும் புத்திசாலித்தனத்துடனும், பொறுமையுடனும் கையாள வேண்டும். அரசியல் அடிப்படைவாதிகள் மதவாதத்தையும், இனவாதத்தையும் இனங்களுக்கிடையில் தூண்டி விட்டு தம்மிடம் இருந்து பறிபோன அரசியல் அதிகாரங்களை மீள பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். இந்தச்செயற்பாடு வன்மையாக கண்டிக்கத்தக்கது. இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இன, மத , மொழி அடிப்படையில் பிளவுப்பட்டு முரண்பட்டுக் கொண்டிருந்தால் ஒருபோதும் நாடு முன்னேற்றமடையாது. இலங்கையர் என்ற நிலையில் இருந்துக் கொண்டு அனைவரும் ஒன்றுப்பட வேண்டும். நாட்டுக்கு முன்னுரிமை கொடுத்தல் அனைவரினதும் பொது உரிமை , அரசியல் தொடர்பிலான தீர்மானங்களை முன்னெடுப்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமையாகும் - என்றார். (எ-61)

## பாதுகாப்பு அமைச்சுக்காக நீதிமன்றம் செல்லமுடியாது

### மனுஷ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 19

அரசமைபின்படி முப்படையினருக்கும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் அரச தலைவருடையதாகும். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக அவரின் நிறைவேற்று அதிகாரம் கட்டுபடுத்தப்பட்டு நாடாளுமன்றத்தின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தம் நடைமுறையில் இருக்கும்வரை அரச தலைவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் அல்ல. ஆனால் பாதுகாப்பு அமைச்சு அரச தலைவருடையதே. பாதுகாப்பு அமைச்சுக்காக நீதிமன்றம் செல்வதில் பயனில்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப்பணியகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 19 ஆவது அரசமைப்பு திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் அரச தலைவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் அல்ல. இந்த அரசமைப்பு திருத்தத்தினூடாக அரச தலைவர் அதிகாரங்கள் சம அளவாக குறைக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அரசமைப்பின் ஊடாக நாட்டினதும் அரசினதும் தலைவராக, பாதுகாப்பு அமைச்சராக, முப்படைத் தலைவராக செயற்படுகிறார். அதற்கமைவாக முப்படைகளின் தலைவராகப் போருக்கு அறிவித்தல், போருக்கு அமைத்தல் போன்ற கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் அரச தலைவரிடம் உள்ளது.

பாதுகாப்பு துறையின் அமைச்சர் என்ற வகையில் முப்படையினருடன் அரச தலைவர் நெருங்கிய தொடர்பை வைத்துள்ளார். இது அரசமைப்பின் ஊடாகப் பரிசீலிக்க வேண்டிய விடயமாகும். பாதுகாப்புத் துறை யாருக்கு சொந்தம் என்பது தொடர்பில் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அதிகாரங்கள் அரச தலைவருக்கு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்களாகும்.

பல்வேறுப்பட்ட கட்சிகள் இருக்கும் நாட்டில் வலுவான அரசு ஒன்றை உருவாக்குவதில் சவால் இருக்கலாம். ஆனால் ஜனநாயகத் தன்மை உடைய நாட்டில் எத்தனை கட்சிகள் வேண்டுமானாலும் உருவாக்கப்படலாம் . அது ஜனநாயகத்தின் உரிமை. இருப்பினும் 'ஒரு நாடு ஒரு நீதி' என்ற கொள்கை உருவாக்கப்பட வேண்டும். இதற்கான யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டுக்கு ஒரே சட்டம் உருவாக்கப்படுமாக இருந்தால் இது போன்ற பிரச்சி னைகள் இடம்பெறாது - என்றார். (எ-61)

## வறட்சியால் முல்லையில் 13,889 குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சி காரணமாக இதுவரை மூன்று பகுதிகளில்13 ஆயிரத்து 889 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் சி.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, துணுக்காய் ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையே இது. வெலிஓயா, ஒட்டுசுடுசுட்டான், மாந்தை கிழக்கு பகுதிகளில் விவரங்கள் திரட்டும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படிபுதுக்குடியிருப்பில் ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 296 பேரும், கரைதுறைப்பற்றில் 10ஆயிரத்து 799 குடும்பங்களைச் சேர்ந்த 33ஆயிரத்து 797 பேம், துணுக்காயில் ஆயிரத்து123 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 426 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் இடங்களுக்குப் பிரதேச சபை ஊடாக குடி தண்ணீர் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (த-ரி3)

## இந்து சம்மேளனத் தலைவர் சி.ஐ.டியினரிடம் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 19

இந்து சம்மேளனத்தின் தலைவர் நாரா.டி.அருண்காந்த் நேற்று குற்றப்பு லனாய்வு திணைக்களத்தில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

இந்து சம்மேளனத்தின் தலைவர் நாரா.டி.அருண்காந்த் க்டந்த மாதம் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தொடர்பில் பல்வேறு காணொலி ஆதாரங்களை வெளியிட்டார்.

நேர்காணலில் வெளியிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் காணொளிகள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவால் கோரப்பட்டதற்கிணங்க, அருண்காந்த் நேற்றுமுன்தினம் சாட்சியம் வழங்கினார். காலை 9 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, காணொலி ஆதாரங்கள் அடங்கிய கையடக்கத் தொலைபேசி மேலதிக விசாரணைகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ள்து.

விசாரணைகளின்போது இத்தகைய செயற்பாடுகளில் ஏன் ஈடுபடுகின்றீர்கள்? உங்களுடைய இலக்கு என்ன?" என்ற அதிகாரிகளின் கேள்விக்கு, முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா வுடனோ அல்லது முஸ்லிம் சமூகத்தினருடனோ எமக்கு எதுவித தனிப்பட்ட பிரச்சினைகளும் இல்லை. ஆனால் ஹிஸ்புல்லா மதவாதத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக செயற் பட்டு வந்தமையாலேயே நான் இவ்வாறு அவருக்கெதிராக ஆதாரங்களைப் பகிரங்கமாக வெளியிட்டேன் என்று பதில் அளித்தாக அருண்காந்த் தெரிவித்துள்ளார். (எ)

## உயிரிழந்த நிலையில் இளைஞர் மீட்பு

வவுனியா, ஜூன் 19

வவுனியா, செட்டிக்குளம் காந்திநகரில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தவறான முடிவெடுத்து அவர் உயிரிழந்திருக்கலாம் என்றும், உயிரிழப்புக்கான காரணம் தெரியவரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

see more news in
NEWUTHAYAN.COM

## அதிரடிப்படையினரின் வாகனம் மோதி முதியவர் காயம்



வவுனியா,ஜூன் 19

சிறப்பு அதிரடிப்படையினரின் வாகனம் மோதி முதியவர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் வவுனியா தொடருந்து வீதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

தொடருந்து நிலைய வீதியில் தரித்து நின்ற சிறப்பு அதிரடிப்படையினரின் வாகனம் வீதிக்கு ஏற முற்பட்ட சமயத்தில்,வவுனியா நகரிலிருந்து தொடருந்து வீதி வழியாக பயணித்துக்கொண்டிருந்த உந்துருளி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் உந்துருளியில் பயணித்த முதியவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவ இடத்துக்கு போக்குவரத்து பொலிஸார் சமூகமளிக்க முன்னர் சிறப்பு அதிரடிப் படையினர் வாகனத்தை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## வாடிக்கையாளர் புதிய செயலி மின்சார சபையால் அறிமுகம்!

கொழும்பு, ஜூன் 19

இலங்கை மின்சார சபை பாவனையாளரின்நன்மை கருதி புதிய செயலி ஒன்றை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மின்சாரப் பாவனையாளர்கள் அனைவரின் நலன் கருதி இலங்கை மின்சார சபை "CEB Care" என்ற செயலி ஒன்றை உருவாக்கியுள்ளது

மின்கட்டணம் செலுத்தல், கட்டண விவரங்கள் அறிதல் , மின்தடை குறித்த முன்னறிவித்தல்களைப் பெறுவது உள்ளிட்ட பல வசதிகள் இந்த செயலியின் ஊடாக செய்துகொள்ள முடியுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்தச்செயலியைக் கூகுள் பிளே ஸ்டோரில் தரவிறக்கம் செய்துகொள்ள இந்த இணைப்பை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ)

478 கிலோ 800கிராம் நிறையுடைய

# பீடி சுற்றும் இலைகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

*478 கிலோ 800கிராம் பீடி சுற்றும் இலைகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மன்னாரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

அவரிடமிருந்து பீடி சுற்றும் இலைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் பள்ளி முனை கிழக்கைச் சேர்ந்த பிரான்சிஸ்அலண்டன்பிகராடோ என்பவரே மன்னார் தாழ்வுபாடு கடற்பகுதியில் வைத்து நேற்று அதிகாலை 2 மணியளவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.
அவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரை யாழ்ப்பாணத்தில் உள்ள சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
(சு-213)



# இறாலின் பிடிபாடு வடக்கில் குறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 19
இலங்கையின் வடக்குப் பகுதியில் இறால் இனங்களின் பிடிபாடுகள் குறைந்துள்ளன என்று மீனவ சமூகம் கவலை தெரிவிக்கின்றது.
குறிப்பாக கூட்டுத் தொழில் செய்யும் மீனவர்களுக்கு மிகவும் குறைந்த அளவான இறால்களே பிடிபடுகின்றன. இதனால் தற்போது சில மீனவர்கள் கடலுக்குச் செல்வதை நிறுத்தி, கூடைகளைத் திருத்தும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் தமிழகத்தில் அதிகளவான இறால்கள் மீனவர்களின் வலைகளில் சிக்கியுள்ளன. மீன்பிடித் தடைக்காலத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் முதன்முதல் தொழிலுக்குச் சென்ற மீனவர்களுக்கே இவ்வாறு பெருமளவு இறால்கள் சிக்கியுள்ளன.
(ம-21)

# கசிப்பு உற்பத்தி இடங்கள் கிளிநொச்சியில் அழிப்பு

கிளிநொச்சி, ஜூன் 19
கட்டைக்காடு மற்றும் வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் இயங்கிய இரு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் குற்றங்களைத் தடுக்கும் பிரிவினருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து நேற்றுமுன்தினம் தர்மபுரம் கட்டைக்காடு குளத்தை அண்டிய காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தைக் கண்டறிந்து அழித்தனர். அங்கிருந்து 45 போத்தல் கசிப்பு, 6 பெரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. உற்பத்தியில் ஈடுபட்டாரென்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய வெற்றிலைக்கேணிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டுள்ளது.
அங்கு 20 லீற்றர் கசிப்பு, 15 லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார். (து-6)

## பயிற்சிப் பட்டறை

இலஞ்ச ஊழல் சட்டங்கள் தொடர்பான அறிவூட்டும் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது. (ஐ)

## நயினாதீவு நாகபூஷணிக்கு ஜூலை 2 இல் கொடிறேற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன் 19
வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு சிறி நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும்,15 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும்,16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)


## குடமுழுக்கு


மட்டுவில் மருதடி தான் தோன்றிப்பிள்ளையார் ஆலய குடமுழுக்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆல்ய முதன்மை குரு சிவசிறி பொன் லக்ஸநாமதாசக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.
குடமுழுக்கு அருளாசியுரைகளை சிவசிறி சதா மகேஸ்வரக் குருக்களும், நல்லை ஆதின குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்துவார். (ஐ-131)

*புத்தகப் பை வீசியெறிந்த விவகாரம்*

# 10 நாள்களின் பின்னர் மாணவன் வேறு பாடசாலையில் சேர்ந்தான்

யாழ்ப்பாணம், ஜூன் 19
பாடசாலைக்குக் கண்ணாடி பையில் புத்தகம் எடுத்துச் செல்லவில்லை என்று மாணவனின் புத்தகப் பையைத் தூக்கி வீசியெறிந்த நிலையில், அந்த மாணவன் 10 நாள்களின் பின்னர் பிறிதொரு பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் செல்லத் தொடங்கியுள்ளார் என்று மாணவனின் தந்தை கணநாதன் தெரிவித்தார்.
எனது மகன் யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் வித்தியாலயத்தில் தரம் 6இல் கற்றார். புத்தகங்கள் கொண்டு செல்லகண்ணாடிப்பையைத் தேடினேன் கிடைக்கவில்லை. கடந்த 7ஆம் திகதி புத்தகங்கள் கொண்டு செல்லும் பையில் புத்தகங்களை வைத்து பாடசாலையில் விட்டேன். இரு பெண் ஆசிரியர்கள் ஓர் ஆண் ஆசிரியர் இரு மூத்த மாணவர்கள் ஆகியோர் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். எனது பிள்ளையின் புத்தகங்களை பையில் இருந்து வெளியே எடுத்து பிள்ளையின் கையில் கொடுத்த பின்பு புத்தகப் பையை வீசி எறிந்தனர்.
எனக்கு 39 வயது. பிறப்பில் இருந்தே இரு கால்களும் இயலாதவன். வாடகை வீட்டில் இருந்து முச்சக்கர வண்டி மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே வாழ்கிறேன். அந்தப் பையை வாங்குவதற்கு எவ்வளவு சிரமப்பட் டேன் என்பது எனக்குத்தான் தெரியும். ஏன் வீசியெறிந்தீர்கள் என்று பாடசாலை வாசலில் முச்சக்கர வண்டியில் இருந்தவாறே கேள்வி கேட்ட என்னைப் பொலிஸார் மூலம் விரட்டினர். இறங்கி நடக்க முடியாத காரணத்தால் வீட்டுக்கு வந்து மனைவியை பாடசாலை அழைத்துச் சென்றேன். மனைவி அதிபருடன் உரையாடினார்.
அதன்போது கூட்டத்துக்கு வரவில்லை. புத்தகப் பை மாற்றவில்லை. ஒழுங்கில்லை என்று சம்பந்தமில்லாத விடயங்களை அடுக்கினார். இதனால் விரத்தியின் உச்சத்தில் இவ்வளவு குறைபாடு இருப்பின் பிள்ளையின் சான்றிதழைத் தருமாறு தாயார் கோரினார். இந்தச் சமயம் அங்கே காவல் கடமையில் பச்சை சீருடையில் இருந்தவரை (இராணுவச் சிப்பாயாக இருக்க வேண்டும்) அழைத்து விட்டனர். அவர் எம்மை மிரட்டினார். சத்தம் இடக்கூடாது தற்போது அவசரகாலச் சட்டம் பயங்கரவாதச் சட்டம் என்பன நடைமுறையில் உள்ளது தெரியும் தானே என்றுகூறி போகுமாறு எச்சரித்தார். நாம் வீடு திரும்பினோம்.
மதியம் மகனை ஏற்றிவரச் சென்றபோது சான்றிதழைப் பெற்றுச் செல்லுமாறு வழங்கினர்.
இதேநேரம் தற்போது வாடகைக்கு இருக்கும் வீட்டி லிருந்து சொந்த ஊரான சாவகச்சேரிக்குத் திரும்பவுள்ளோம் என்றுகூறி கடந்த ஜனவரி மாதமும் கோரினோம். அப்போது சாவகச்சேரிக்குக் குடும்ப அட்டையை மாற்றி அங்கே குடியமர்ந்த கடிதத்தை வாங்கிவாருங்கள் வழங்க முடியும் எனத் தெரிவித்திருந்தனர். இதன் பின்பு பழைய மாணவர்கள் வந்து எமது விவரத்தைப் பெற்றுச் சென்றனர். எந்த முன்னேற்றமும் இல்லை. வலயக் கல்வி அலுவலகம், மாகாணக்கல்வித் திணைக்களத்துக்கும் தகவல் வழங்கப்பட்டது.
அனுமதி வழங்காது விடினும் கவலை இல்லை. எம்மை சமூக ரீதியிலும் வாழும் சூழல் தொடர்பிலும் இழிவாகப் பேசி துன்புறுத்தி விட்டனர். இறுதியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலரின் முயற்சியால் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் அனுமதி கிடைத்தது - என்றார்.
மாணவனின் புத்தகப் பை வீசப்பட்டது பற்றி வலயக் கல்விப் பணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. அது கல்வி அமைச்சின் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.
"குற்றச்சாட்டுத் தொடர்பில் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். எனினும் குறித்த மாணவன் அந்தப் பாடசாலையில் கல்வியைத் தொடர விரும்பாவிட்டால் மாணவன் விரும்பும் வேறு எந்தப் பாடசாலையிலும் அவரைச் சேர்க்க முடியும்" என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்திருந்தார்.
எனினும் மாணவனின் புத்தகப் பை வீசப்பட்டதாகக் கூறப்படுவதை சென் சாள்ஸ் வித்தியாலய அதிபர் முற்றாக மறுக்கிறார். அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை. பாடசாலைக்கு அவதூறு ஏற்படுத்தவே இவ்வாறு கூறப்படுகிறது என்றும் தெரிவிக்கிறார்.
"மாணவன் 10 நாள்களாகப் பாடசாலைக்குச் செல்லாது வீட்டிலுள்ளார் என்று தகவல் எனக்கு வழங்கப்பட்டது. அதனால் அதில் தலையிட்டு மாணவனை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபருடன் பேசி அங்கு சேர்த்தேன்" என்று யாழ்ப்பாணப் பிரதேச செயலர் தெரிவித்தார். (து-105)





யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத்தலைமையகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இனங்களுக்கு நல்லிணக்கத்தை வலியுறுத்தி நல்லூர் கந்தன் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாட்டில் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி உள்பட சிப்பாய்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (ம)

# கொக்குவிலில் தாக்குதல் நடத்தியோர் மடக்கிப்பிடிப்பு

## 10பேரைக் கைது செய்துள்ளோம் என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 19
கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட வாள்வெட்டுக் குழுவினர் என்ற குற்றச்சாட்டில் 10 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொக்குவில் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வீடொன்றில் உட்புகுந்த வாள்வெட்டுக் கும்பல் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியதுடன், வீட்டில் இருந்த இலத்திரனியல்பொருள்களையும்சேதமாக்கியுள்ளது.
இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள்என்றகுற்றச்சாட்டில் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கொக்குவில்பொற்பதி வீதியில் உள்ள ஆலயத்தின் பின்புறமாக மது அருந்திக்கொண்டு இருந்த வேளை, பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 10 பேரையும் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில்வைத்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.
இதேவேளை சுதுமலை அம்மன் கோவில் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் குறித்த 10 பேருக்கும்தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகள்இடம்பெற்றுவருகின்றன. (ஐ-106)



## நூலகக் கண்காட்சி

கொடிகாமம், ஜூன் 19
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின்நூலககண்காட்சிகடந்தவியாழக்கிழமை முற்பகல்9மணியளவில்அதிபர்க. மங்களேஸ்வரன்தலைமையில்பாடசாலையில்நடைபெற்றது. நூலக ஆசிரியர் திருமதி உ.விஷ்ணு தாசனின் வழிகாட்டலில் மாணவர்களின் ஆக்கப் பொருள்கள், பண்டைய நாணயங்கள், முத்திரைகள், அரும்பொருள்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.
நிகழ்வில் அயற் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்உட்படபாடசாலைஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)

## குடமுழுக்கு

ஊர்காவற்றுறை, ஜூன் 19
ஊர்காவற்றுறை சுருவில் அருள்மிகு சிறி பூர்ணா, புஷ்கலாதேவி சமேத அரிகர புத்திர ஐயனார் ஆலய குடமுழுக்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் 11 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.
எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறும்.
குடமுழுக்கைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)





அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழா விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் இம்மானுவல் ஆர்னல்ட் கலந்து கொண்டு விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தார். (ஐ-ரி1)

## 33 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19
உதயபுரம் வேளாங்கண்ணி தோட்ட பகுதியில் குடியிருக்கும் 33 குடும்பங்களுக்கு மின்சார இணைப்புக்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் முயற்சியால் இந்த குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
மின்சார இணைப்பை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

# கூட்டத்தைப் பார்வையிடலாம் இல்லையேல் வெளியேறலாம்

## ஈ.பி.டி.பி. ரங்கேஸ்வரனுக்கு சுமந்திரன் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூன் 19
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இந்த விடயம் தொடர்பாக விவாதம் செய்ய முடியாது என்பதால் தொடர்ந்து இருந்து கூட்டத்தைப் பார்வையிடலாம். இல்லையேல் வெளியேறலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்கூறியதும்அமைதியாக சபையில் அமர்ந்திருந்தார் ஈ.பி.டி.பியின் ஐ.ரங்கேஸ்வரன். 15மாதங்களின்பின்னர் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் சாவகச்சேரி கலைமன்றகலாசாரமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல்நடைபெற்றது.
கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், வடக்குமாகாண சபையின்முன்னாள்உறுப்பினர்களான கே.சயந்தன், சு.சுகிர்தன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், உபதவிசாளர் அ.பாலமயூரன், உறுப்பினர்கள், சாவகச்சேரிபிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச, திணைக்கள அலுவலர்கள் பொது அமைப்புகளின்பிரதிநிதிகள்எனப்பலர் கலந்து கொண்டனர்.



கூட்ட ஆரம்பத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாக உதவிச் செயலர் ஐ.ரங்கேஸ்வரன், "பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு அரச அமைச்சரவையைச்சேர்ந்தவர்கள் தலைவராகவும் ஏனைய ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் இணைத் தலைவர்களாகவும் செயற்படவேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ள நிலையிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு எவரும் நியமிக்கப்படாத நிலையில் இன்றைய கூட்டம் நடைபெறுவதற்கு அங்கீகாரம் உள்ளதா?. இங்கு நிறை வேற்றப்படும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்படுமா?"என்றுகேள்விஎழுப்பினார். கூட்டத்துக்கு இணைத் தலைவராகச் செயற்பட்டஎம்.ஏ.சுமந்திரன், "யாழ்ப்பாணமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ்தேவானந்தாநாடாளுமன்றில் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது நானும் கூட்டத்தின் இணைத் தலைவருமான இராஜாங்க அமைச்சரும் அங்கு இருந்தோம். யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்ஆளும் கட்சியின் ராஜாங்க அமைச்சருமானதிருமதிவிஜயகலா மகேஸ்வரன் தலைமையிலேயே இன்றைய கூட்டம் நடைபெறுகிறது"என்றுதெரிவித்தார்.
இதுதொடர்பானமேலும்சில கருத்துக்களை ரங்கேஸ்வரன் முன்வைக்க முற்பட்டபோது, "இந்த விடயம் தொடர்பாக விவாதம் செய்ய முடியாது என்பதால் தொடர்ந்து இருந்து கூட்டத்தைப்பார்வையிடலாம். இல்லையேல் வெளியேறலாம்" என்றும்சுமந்திரன்தெரிவித்தார். தொடர்ந்துகூட்டம்நடைபெற்றது. எனினும், கூட்டத்தில் இணைத்தலைவர்கள் அமரும் வரிசையில் காணப்பட்டகதிரையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அமர்ந்திருந்தார். (த-9,159,131)

## சிறந்த குரல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 19
சிறந்த குரல் அறிமுகம் நிகழ்வின் 3 ஆவது சுற்று கடந்த ஞாயிற்றுகிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுசரஸ்வதிமாதர்சங்கநோர்வேகிளையின் ஆதரவுடன் இந்த நிகழ்வுநடத்தப்பட்டது. (ஐ-ரி1)



## சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய இரு வர்த்தக நிலையங்களுக்கு சீல்

பருத்தித்துறை, ஜூன் 19
சுகாதாரச்சீர்கேடுகளுடன் காணப்பட்ட இரு வர்த்தக நிலையங்கள் நீதிமன்றின் உத்தரவின்பேரில் சுகாதாரப்பகுதியினரால் நேற்றுமுன்தினம் சீல் வைக்கப்பட்டன.
கடந்த வாரம் பருத்தித்துறை நகரப்பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பொது சுகாதாரப் பரிசோதகரால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டன.
இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
அத்துடன் சுகாதாரப் பகுதியினரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்வரைவர்த்தகநிலையங்களைசீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டதையடுத்து இரு வர்த்தக நிலையங்களும் சீல் வைத்து மூடப்பட்டன. (ஐ 9)

# மணல் திருட்டைத் தடுத்திருந்த கிராம அலுவலர் மீது தாக்குதல்

## பொலிஸ் விசாரணை மந்தம் என்று குற்றச்சாட்டு

*கிளிநொச்சி, ஜூன் 19*

*பச்சிலைப்பள்ளியில் மணல் கொள்ளையைத் தடுக்கச் சென்ற அந்தப் பகுதிக்குரிய கிராம அலுவலரான பெண் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.*

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கச்சார்வெளி கிராம அலுவலர் பிரிவில் உள்ள செல்வபுரம் பகுதியில் தொடர்ச்சியாக மணல் கடத்தல் இடம்பெறுகிறது என்று மக்கள் முறைப்பாடு கூறி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மணல் அகழ்வு இடம்பெறுகிறது என்று குறித்த பகுதி கிராம அலுவலருக்கு மக்கள் முறையிட்டனர். அந்தப் பகுதிக்குச் சென்ற கிராம அலுவலர் மணல் ஏற்றியவர்களிடம், "அனுமதி எடுத்து மணல் ஏற்றுங்கள். தேவையானளவு மணல் ஏற்ற பிரதேச செயலகத்தில் அனுமதி வழங்கப்படுகின்றது. இப்போதைக்கு மணல் ஏற்ற வேண்டாம்" என்று கூறி விட்டு வந்துள்ளார்.

இருப்பினும் அவர்கள் அதனைக் கவனத்தில் எடுக்காது மீண்டும் ஏற்றியதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய மீண்டும் அங்கு சென்றபோது அங்கு நின்ற ஒருவர் கிராம அலுவலரைத் தள்ளி வீழ்த்தி தாக்கியுள்ளார் என்றும் அது பற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் சந்தேகநபர் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. இந்த விடயம் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் சென்ற பொலிஸார் விசாரணை நடத்த நேரம் கேட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் தொடர்ச்சியாக முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி, அரசர் கேணி, கிளாலி, புலோப்பளை, இயக்கச்சி, சோரன்பற்று போன்ற பகுதிகளில் மணல் ஏற்றப்படுகின்றது.

அதனைக் கட்டுப்படுத்துமாறு பளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்'' என்று பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் தெரிவித்தார். (த-6)

## குருதிக்கொடை முகாம்

மன்னார்,ஜூன் 19

குருதிக்கொடை முகாம் ஒன்று நாளை வியாழக்கிழமை இலக்கம் 9, வயல் வீதி, மன்னார் என்னும் முகவரியில் அமைந்துள்ள 'உதவிக்கரம்' நிலையத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

கறிற்றாஸ் வாழ்வுதயம் இந்தக் குருதிக்கொடை முகாமை ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாமில் இருபாலாரும் கலந்துகொண்டு குருதித்தானம் செய்யுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-60)

## வர்த்தகர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 19

வலி.தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களுக்கான் நலன்சார் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான கூட்டம் நேற்று இடம்பெற்றது.

உடுவில் பிரதேச செயலரின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தர்த்தனின் இணைப்புச் செயலரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வலி. தெற்கு வர்த்தகர்களுடைய தேவைப்பாடுகள் மற்றும் இன்னோரன்ன விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

அத்துடன் வர்த்தகர்களின் கோரிக்கைக்கிணங்க உடுவில் பிரதேச செயலகர் மற்றும் வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் ஆகியோர் முன்னிலையில் புதிய வர்த்தக சங்கமும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ)



## விழிப்புணர்வு செயலமர்வு

முல்லைத்தீவு,ஜூன் 19

சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு ஒட்டுசுட்டான் அறிவகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவக முகாமையாளர் செ.செல்வதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சிறுவர்களுக்குச் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கருத்துக்களும், கட்டாயக் கல்வி மற்றும் குடும்ப வன்முறைகள் தெடர்பான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. இந்தச் செயலமர்வில் 40 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-222)





# வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி வவுனியாவில் போராட்டம்

வவுனியா,ஜூன் 19

வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி வவுனியா கந்தபுரம் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட நாகர் இலுப்பைக்குளம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் 50 க்கு மேற்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்துத் தெரிவித்ததாவது:

"நாகர் இலுப்பைக்குளத்தில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ள போதும் 43 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் இல்லாத நிலமை காணப்படுகின்றன.

வீட்டுத்திட்டம் வழங்குவதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ள போதும், எமக்கான வீட்டுத்திட்டம் வழங்கப்பட வேண்டும்" என்றனர்.

போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் திருமதி எம். குரூஸ்,

"தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 147 மாதிரிக் கிராமங்களை வவுனியாவில் அமைத்துள்ளது. பரவலான வீடமைப்புத் திட்டங்களுக்கு எமக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

பயனாளிகள் தெரிவானது பிரதேச செயலகத்தினூடாக எங்களுக்கு வழங்கப்படுகிறது. இருந்தபோதும் எமது அதிகார வரம்புக்குட்பட்டுஎமது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்" எனத் தெரிவித்தார். (ஐ)

வவுனியாவில் 4 மாதங்களில்

# 1929 இலக்கத்துக்கு 18 முறைப்பாடுகள்

வவுனியா, ஜூன் 19

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்துக்கு கடந்த நான்கு மாதங்களில் 1929 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 18 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அதன் மாவட்ட உளசமூக அலுவலர் செ.நந்தசீலன் தெரிவித்தார்.

1929 என்ற சிறுவர் உதவி தொலைபேசி இலக்கத்துக்கு இந்த வருடத்தின் ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் 18 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு நேரடியாகக் கிடைக்கப்பெற்றவை. அவற்றில் அதிகளவானவை வவுனியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலிருந்தே கிடைத்துள்ளன.

சிறுவர் முரண் சம்பவம் இடம்பெறும் வீடுகளுக்கு அருகில் உள்ளவர்கள், பாடசாலைச் சமூகம் மற்றும் மருத்துவ மாதுக்கள் மூலமாகவே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. பாடசாலை இடைவிலகல் தொடர்பான முறைப்பாட்டு பதிவுகளே அவற்றில் அதிகளவானவை எனவும் அவர் தெரிவித்தார். (த)

## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார்,ஜூன் 19

போதை ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மன்னார் முசலிப்பிரசேத்தில் நேற்று நடைபெற்றது.

மன்னார் சமுர்த்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை சிலாவத்துறை, அரிப்பு ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இந்தக் கருத்தரங்கில் போதைப் பொருள் பாவனையால் உண்டாகும் தீமைகள் மற்றும் போதைப்பொருள் பாவனையில் இருந்து எவ்வாறு விடுபடுவது போன்ற கருத்துக்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வளவாளர்களாகச் சமுர்த்தி அலுவலகர் ஆரோன் மற்றும் அபிவிருத்தி அலுவலகர் றொபின் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-213)



# பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு ஆள்சேர்ப்பு



யாழ்ப்பாணம்,ஜூன் 19

பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுக்கு பதிவு செய்யும் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் நெறிப்படுத்தலின் கீழ் பொலிஸ் ஆள், சேர்ப்பு பிரிவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட இளையோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது கல்விச் சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பங்களை செலுத்திப் பதிவுகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வரும் மக்களும் தமிழ் மொழியிலான விளக்கங்களைப் பெறுவதற்கு பல இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

ஆகவே தமிழ் இளைஞர்களை சேவைகளுக்கு உள்ளீர்ப்பதன் மூலம் துறைகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-7)

## மன்னார் அருவியாற்றுப் பாலத்தில்

# சிலை அமைப்பதற்கு அனுமதி பெறவில்லை

*மன்னார், ஜூன் 19*

மன்னாரில் முசலிப் பிரதேச சபையின் அனுமதி எதுவுமே பெறாது அருவியாற்றுப்பாலத்துக்கு அருகில் மாதா சிலை வைக்கப்பட்டுள்ளது. இது மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் செயல் என்று முசலிப் பிரதேச சபைத் தவிசாளர் சுபிஹான் தெரிவித்தார்.

முசலிப்பிரதேசத்தையும் நானாட்டான் பிரதேசத்தையும் இணைக்கும் அருவியாற்றுப் பாலத்தின் அருகில் நீளமான கொங்ரீட் தூண் அமைத்து இனந்தெரியாதவர்கள் இந்த மாதா சிலையைக் கடந்த வாரம் இரவு நட்டுள்ளனர் என்று அறியமுடிகிறது.

தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது:

"மக்கள் அதிக நடமாட்டம் இல்லாத காட்டுப் பகுதியில் எவருக்கும் தெரியாமல் இரவிரவாகச் சிலை அமைப்பதற்கான காரணம் என்ன?. இவர்களது இந்த செயல் பிற மதத்தினரை ஆத்திரமூட்டும் செயலாக அமையும். அந்த இடத்தில் கிறிஸ்தவர்களின் சிலை வைக்கப்பட்டுள்ளதைப் பார்த்து இந்துக்கள் வைப்பார்கள், இஸ்லாமியர்கள் தங்களுக்கும் இடம் கேட்பார்கள். பிக்குமார் புத்தர் சிலை வைப்பார்கள். எனவே இது மத முறுகலுக்கு வழி வகுக்கும். இது சம்பந்தமாக மக்களும் மதத்தலைவர்களும் எம்மிடம் முறையிட்டுள்ளனர். அந்த வகையில் மக்கள் மத



ரீதியாக முரண்படாமல் இருப்பதைத் தக்கவைக்கும் பொறுப்பு எமக்கு உண்டு என்றபடியால் சிலாவத்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடமும் கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளோம்.

அதற்கு அவர்கள் அருவியாற்றுப்பாலத்தினருகில் வைக்கப்பட்டுள்ள மாதா சிலை அகற்றுவது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ.மோகன்றாஸ் மற்றும் முசலிப் பிரதேச செயலருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அப்படி சிலை அகற்றப்படாவிட்டால் நீதிமன்றத்தின் மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்" என்று முசலிப் பிரதேச சபைத் தவிசாளர் சுபிஹான் தெரிவித்தார். (த-213)





## மாணவர்களின் மாதிரிச்சந்தை

கொடிகாமம், ஜூன் 19

கிளிநொச்சி இந்துக் கல்லூரி தரம் 6 மாணவர்களின் மாதிரிச்சந்தை நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணியளவில் பாடசாலையில் இடம்பெற்றது.

தொழில் நுட்பப் பாட ஆசிரியர் திருமதி பா. ரஜிதா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்தனர். (ஐ-159)



## விளையாட்டுக் கழகத்துக்கு மஸ்தான் எம்.பி. அன்பளிப்பு

வவுனியா, ஜூன் 19

வவுனியா தோணிக்கல் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.காதர் மஸ்தான் நேற்றுமுன்தினம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதியிலிருந்து இவற்றை வழங்கினார். ஐக்கிய விளையாட்டு கழகத்தில் அதன் செயலர் யுவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## மாணவர்மன்ற ஒன்றுகூடல்

கொடிகாமம், ஜூன் 19

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்மன்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய முதன்மை மண்டபத்தில் உயர்தர மாணவர் மன்ற தலைவர் மயூரசா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாகப் பழைய மாணவியும் கண்டி போதனா மருத்துவமனையின் வைத்திய கலாநிதியுமான அர்ச்சனா நித்தியரூபன், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜிகரன், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வர்த்தக பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-159)

## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

கிளிநொச்சி, ஜூன் 19



மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி கிளிநொச்சி புளியம்பொக்கணையில் புதிதாக அமைந்த 'தில்லைக்கணபதி' சவாரித்திடலில் அண்மையில் இடம்பெற்றது. 5 பிரிவுகளாக இடம்பெற்ற போட்டியில் 70 சோடி மாடுகள் கலந்துகொண்டன.

இதில் முதல் நிலையில் வெற்றியீட்டியவர்களுக்கு ஈருருளிகளும், ஏனைய வெற்றியாளர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. போட்டி நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார். (ஐ)

## சோதனைச் சாவடிகளின் முன்பாக விபத்துக்கள்

### ஐவர் மருத்துவமனையில்

முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரின் சோதனைச் சாவடிக்கு முன்னால் மூன்று விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. சிறுவன் உட்பட ஐந்து பேர் காயமடைந்து முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நேற்றுமுன்தினம் காலை முள்ளியவளை தண்ணீருற்று இராணுவ சோதனைச் சாவடியில் வாகன விபத்துக்கு உள்ளாகி வயோதிபர் படுகாயமடைந்தார். பிற்பகல் முள்ளிவாய்க்கால் இராணுவச் சோதனை சாவடிக்கு அருகில் நடந்து சென்றுகொண்டிருந்த சிறுவன் ஒருவர் மீது கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியது. சிறுவன் மாஞ்சோலை மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு அருகாமையில் ஏற்பட்ட வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்து மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



## இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படப் போவதில்லை

### சிவமோகன் எம். பி தெரிவிக்கிறார்

வவுனியா, ஜூன் 19

இனப்பிரச்சினைக்கான தீர்வு முடக்கப்பட்டுவிட்டது. அது இனிச் சாத்தியப்படப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.



அவரது வவுனியா அலுவலகத்தில் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பிலான ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடந்தது. அதில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு ஊடகவியலாளர் ஒருவர், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றது என்று பரவலாக உங்களினுடைய கட்சி உறுப்பினர்களே தெரிவித்திருக்கின்றனர். அதனடிப்படையில் தமிழ் மக்களின் உரிமையை அல்லது அரசியல் தீர்வைப் பெற்றுகொள்ள இதுதான் சந்தர்ப்பமாகக் கருதப்படுகிறது என்று ஏனைய அரசியல்வாதிகள் கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் நழுவ விட்டால் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தமிழ் மக்களின் உரிமைகளையும் தீர்வையும் பெற்றுக் கொள்வதற்கு கிடைக்குமா?" என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:

"தமது கட்சியாக இருக்கட்டும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பாக இருக்கட்டும், நாங்கள் இந்த அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்பது நூறு வீத தவறான ஒரு கருத்தே. இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் முடக்கப்பட்டுவிட்டது. இனிமேல் அது சாத்தியப்படப்போவதில்லை என்பது வெளிப்படையாகிவிட்டது. இது எப்படி முடக்கப்பட்டது? என்றால் இனவாதிகளால் மெல்ல மெல்ல பின் தள்ளிச் செல்லப்பட்டு இறுதியாக இனவாதிகளுடன் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் ஒன்று சேர்ந்துள்ளார். தமிழர்களின் வாக்குகளைப் பெற்று அரசதலைவராகி, தமிழ் மக்களுக்கே துரோகம் செய்து நாடகத்தை நிறைவேற்றி முடித்துவிட்டார்.

எனவே இங்கு அது அல்ல பிரச்சினை. நான் கூறுகிறேன், இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவானவர்களல்லர். ஆனால் எமது மக்களுக்கு அநியாயம் செய்தவர்கள், எதிரானவர்கள், இன்னும் இன்னும் எத்தனையோ அராஜகங்களைச் செய்யத் துடிப்பவர் களை அரசாட்சிக்கு வர விடாமல் தடுப்பததே எமது நடவடிக்கையாகத் இருக்கின்றது" என்று தெரிவித்தார். (த)

# வடக்கில் கல்வியைத் தனி அமைச்சாக்கினால் ஏனைய அமைச்சுக்கள் முக்கியமற்றவையா?

## மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கேள்வி



*யாழ்ப்பாணம், ஜூன் 19*

**மா**காண சபையின் கீழ் முதலமைச்சர் உட்பட 5 அமைச்சர்கள் மட்டுமே இருக்க முடியும் என்பது சட்டம். அவ்வாறிருக்க வடக்கில் கல்வியை மட்டும் தனியான அமைச்சாக பிரிக்குமாறு கோரினால் ஏனைய அமைச்சுக்கள் முக்கியத்துவம் அற்ற அமைச்சுக்களா?

இவ்வாறுவடக்குமாகாணசபை யின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார். வடக்கு மாகாணத்தின் கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளையோர் விவகார அமைச்சிலிருந்து கல்வி அமைச்சை தனி அமைச்சாக்கி வடக்கு மாகாணத்தின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாணத்தின் ஆளுநர் சுரேன் ராகவனிடம் முன்வைத்த கோரிக்கை கல்வியின் பால் அக்கறை கொண்ட விடயமாக இருக்கலாம் ஆனால் மத்திய கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இதற்கு முழு மனதுடன் அங்கீகாரம் வழங்கியுள்ளார் என்று தமிழர் ஆசிரியர் சங்கம் கூறுவது அறியாமையே.

வடக்கு மாகாண கல்வியில் ஏற்பட்ட பின்னடைவுகள், ஏற்படும் பின்னடைவுகள் அதற்கான காரணங்களை விளக்கி அண்மையில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் மேற்கொண்ட கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்துக்குத் தனியான கல்வி அமைச்சு வேண்டும் என்ற கோரிக்கையை எழுத்து மூலமாக முன்வைத்தனர். அதில் தவறு கிடையாது.

அதேநேரம் அதன் பிரதிகளை மத்திய கல்வி அமைச்சரிடமும், மத்திய கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடமும் கையளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை முழுமையாக ஆராய்ந்த கல்வி ராஜாங்க அமைச்சர் வடக்குக்கு தனியான கல்வி அமைச்சுத் தேவை என்பதனை ஆளுநரிடம் எழுத்து மூலமாக வலியுறுத்தியுள்ளார் என்றால் இது தவறான விடயம்.

இதனை வடக்கு மாகாணத்தின் ஆளுநருக்கு தனது முன்மொழிவாக இராஜாங்க அமைச்சர் தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும் உரிமை உண்டு. ஆனால் கொழும்பு அமைச்சராக முன்வைக்கும் எந்த அதிகாரமும் அவருக்கு இல்லை. ஏனெனில் இது முழுக்க மாகாண சபைக்கு உட்பட்டது. கொழும்பு எந்தச் சிபார்சையும் செய்ய முடியாது.

இன்றுகல்வியைத்தனியான அமைச்சாக பிரித்தால் நாளை சுகாதாரமும் தனியான அமைச்சாகக் கோரும். அதன் பின்பு விவசாயம். இவ்வாறே அனைத்து முக்கிய துறைகளும் தனியான அமைச்சுக் கோருமானால் எத்தனை அமைச்சுக்களை நியமிப்பது என்ற சிந்தனையின் பின்பே கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரனின் கோரிக்கை நடைமுறைச் சாத்தியமற்றது - என்றார்.

(த-105)

---

*வடக்கு மார்க்கத்துக்கான*

## 4 தொடருந்து சேவைகள் திருத்தத்துக்காக நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 19

வடக்கு மார்க்கத்திலான 4 தொடருந்து சேவைகளை நாளைஇடம்பெறாதுஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு தொடருந்து மார்க்கத்தில் பொல்கஹவெலயில் இருந்து பொத்துஹெர வரையிலான மார்க்கத்தில் இடம்பெறவுள்ள மறுசீரமைப்புக் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீனகயா கடுகதி தொடருந்து, தலைமன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கான இரவு நேர தபால் தொடருந்துகள் என்பனவும் நிறுத்தப்பட்டுள்ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஒ.5)

---

## தொடருந்து தொழிற்சங்கத்தினர் இன்று போராட்டம்

கொழும்பு, ஜூன் 19

தொடருந்து தொழிற்சங்க ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர். இன்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க முடிவு செய்துள்ளனர்.

சாரதிகள், காவலர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

சம்பளம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வுவழங்குமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ஒ.5)

---

# அமெரிக்கப் படைகள் கால் வைக்கலாம்!

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 19

அமெரிக்க படைகள் இலங்கையில் கால் வைக்காது என்றுஉத்தரவாதம்கொடுக்க முடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சாந்த கோட்டேகொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எவ்வாறாயினும் அமெரிக்க படைகள் இலங்கைக்கு வரும் என்று நான் நம்பவில்லை. தற்போது பேசப்பட்டு வருகின்ற சர்ச்சைக்குரிய சோபா ஒப்பந்தம் தொடர்பாக நாங்கள் படித்து பகுப்பாய்வு செய்துள்ளோம். சில பிரிவுகள் குறித்து சம்பந்தப்பட்ட அமெரிக்க அதிகாரிகளுக்கு எமது கருத்தைத் தெரிவித்துள்ளோம்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் இது அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். எவ்வாறாயினும் நாட்டின் நலன்களுக்காகவே இந்த ஒப்பந்தம் கொண்டுவர திட்டமிடப்படுகின்றது. அது நாட்டினதும் பிராந்தியத்தினதும் ஒருமைப்பாட்டுக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தாது என்பதை உறுதியாக கூறமுடியும்.

எமது இராணுவம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வருகின்றது. இலங்கைக்கு வெளிநாட்டுப் படைகள் தேவையில்லை. இது போன்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதில் இலங்கை மிகவும் எச்சரிக்கையாக இருக்கும் - என்றார். (ஒ.5)

---

# இரு பொலிஸ் குழுக்கள் விசாரணைக்கு நியமனம்

கொழும்பு, ஜூன் 19

முன்னாள் ஆளுநர்கள் ஹிஸ்புல்லா, அசாத் சாலி மற்றும் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் உள்ளிட்டோருக்கு எதிரான முறைப்பாடுகள்தொடர்பானவிசாரணைகளுக்காக இரண்டு சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளை உள்ளடக்கிய இரு குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளன.

ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகிய முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் உள்ளிட்டோருக்கு எதிராக 27 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து சாட்சிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ.5)

---

# விக்கியுடன் இணைவதில் எந்தப் பிரச்சினையுமில்லை

## தமிழர் நலன்களை பலியிட்டவர்களுடன் இணையமாட்டோம் என்கிறார் கஜேந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 19

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலர் சி.வி.விக்கினேஸ்வரனுடன் இணைந்து செயற்படுவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கோ எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் கடந்தகாலங்களில் தமிழ் மக்களின் நலன்களை வேறு சக்திகளுக்குப் பலியிட்ட தரப்புக்களுடன் இணைந்துசெயற்படுவதிலோ அல்லது அவர்களையும் இணைத்துக் கொள்வதிலேயோ எந்தவித பிரயோசனமும் இல்லை. அவ்வாறான தரப்புக்களுடன் நாங்கள் சேர்ந்து பயணிக்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ளஅவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை அவர் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

சிலதினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் விக்கி னேஸ்வரனும் கஜேந்திரகுமாரும் உரையாற்றியிருந்தனர். தானும் கஜேந்திரகுமாரும் இணைந்தால் சாதிக்கமுடியாத தொன்றுமில்லை என்று விக்னேஸ்வரன் கூறியிருந்தார். அதன் பின்னர் உரையாற்றிய கஜேந்திரகுமார் விக்கினேஸ்வரனுடன் சேர்ந்து செயற்படத் தயாராக இருக்கிறோம் என்று கூறியி ருக்கின்றார்.

நாங்கள் ஒன்றுசேர்ந்து தமிழ் மக்களுடைய நலன்களுக்காகப் பேரம் பேசவேண்டிய இடங்களில் பேரம் பேசவேண்டும். அதற்கு ஒத்துழைக்கக் கூடியவர்க ளோடு தான் சேர்ந்து பயணிக்கவேண்டுமேதவிர அதைக் குழப்பக் கூடியவர்களோடு நாங்கள் சேர்ந்து பயணிக்கமுடியாது. இதுதான் கட்சியின் நிலைப்பாடு - என்றார்.

(த-ரி1)

---

# ஸஹ்ரானுக்கு பயிற்சி வழங்கியவர் கைதாம்

கொழும்பு, ஜூன் 19

தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரான் ஹாசிம்தலைமையிலான குழுவினருக்கு பயிற்சி வழங்கிய ஆமி மொஹிதீன் என்ற சிப்பாய் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மற்றும் சில இடங்களில் ஸஹ்ரான் கும்பலுக்கு குண்டு வெடிப்பு பயிற்சி வழங்குவதற்கு இவரே நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் சிலர் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆமி மொஹிதீன் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் காணாமல் போயிருந்ததாக கூறப்படுகின்றது. அவர் குண்டு தொடர்பில் தேர்ச்சி பெற்ற ஒருவராவார். (ஒ.5)

---

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றனர்

*4 டிப்பர் சாரதிகள் மீது வழக்கு*

கிளிநொச்சி, ஜூன் 19

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச்சென்ற நான்கு டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏ9 வீதியில் நேற்றுமுன்தினம் 3 வாகனங்களும் அதற்கு முதல் நாள் ஒரு வாகனங்களும் மடக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் சாரதிகளைக்கைது செய்திருந்தனர். அவர்கள் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த-6)

# இராணுவத்தில் 99% சிங்கள பௌத்தர்கள்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 19
இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட இராணுவத்தில், 2 ஆயிரத்து 500 பேரைத் தவிர ஏனையோர் அனைவரும் சிங்கள பௌத்தர்களே என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

'இராணுவத்தில் உள்ளவர்களில் 99 வீதமானோர் சிங்கள பௌத்தர்களே யாவர். இரண்டு இலட்சம் பேர் இராணுவத்தில் உள்ளனர். இவர்களில், ஆயிரத்து 600 கிறிஸ்தவர்களும், 700 முஸ்லிம்களும் இருக்கின்றனர். இந்துக்கள் வெறும் 200 பேரே உள்ளனர். எனினும், இராணுவத்துக்குள், இன, மத, சாதி பேதங்கள் எதுவும் கிடையாது' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.5)

## தேர்தலில் போட்டியிடுவதற்கு கோத்தாவுக்கு தடையில்லை

### கம்பன்பில கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 19
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச போட்டியிடுவதற்கு, எந்த தடையும் இல்லை என்று, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
'கோத்தபாய ராஜபக்ச எந்தப் பிரச்சினையும் இன்றி அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும். அமெரிக்க குடியுரிமையைத் துறக்கின்ற ஆவணங்களை அவர் பெற்றுக் கொண்டு விட்டார். அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அமெரிக்க குடியுரிமை விவகாரத்தால் எந்தப் பிரச்சினையும் வராது' என்றும் அவர் கூறினார். (ஓ.5)

## அமெ. இராணுவத்திடம் பயிற்சிபெறும் இலங்கை

கொழும்பு, ஜூன் 19
இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்க இராணுவத்தின் சிறப்பு படையைச் சேர்ந்த வான்வழி தரையிறக்க அணியால் திருகோணமலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
பலன்ஸ் ஸ்ரைல் 2019/01 திட்டத்தின் கீழ், கூட்டு ஒருங்கிணைந்த பரிமாற்ற பயிற்சி என்ற பெயரில் இந்தப் பயிற்சிகள் கடந்த 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. கடற்படையின் சிறப்பு படகு அணியைச் சேர்ந்த 24 பேர் மற்றும், 4 ஆவது அதிவேக தாக்குதல் அணியைச் சேர்ந்த 12 பேர் என்று மொத்தம் 36 கடற்படையினர் இந்தப் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர்.
இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, அமெரிக்க இராணுவத்தின் 19 ஆவது சிறப்பு படையைச் சேர்ந்த வான்வழி தரையிறக்க அணியின் 10 பயிற்சி நிபுணர்கள் திருகோணமலைக்குச் சென்றுள்ளனர். மூன்று வாரங்களுக்கு நீடிக்கவுள்ள இந்தப் பயிற்சி, ஜூலை 5ஆம் திகதி நிறைவடைய வுள்ளது. (ஓ.5)



## சந்தேகநபர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூன் 19
தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் சந்தேகநபரை விடுவிக்க ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முற்பட்ட சந்தேகநபர் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினரை பிணையில் விடுதலை செய்யுமாறு கூறி, இரண்டரை இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்க முற்பட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 8ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.
ஐந்து இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வழங்குவதாகத் தெரிவித்து, அதில் ஒரு தொகை பணத்தை உடனே வழங்குவதாகவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் விடுவிக்கப்பட்ட பின்னர் எஞ்சிய பணத்தை தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து இலஞ்ச ஒழிப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

## மைத்திரி – ரணில் மோதலால் நாட்டுக்குத்தான் பேராபத்து!

### வேலுகுமார் சீற்றம்

கொழும்பு, ஜூன் 19
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது பதவி நிலையை மறந்து, போட்டி அரசியலில் ஈடுபடுவதானது நாட்டுக்கே பேராபத்தாக அமையும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தொலைக்காட்சிகளில் தற்போது ஒளிபரப்பப்படும் தமிழ் சின்னத்திரை நாடகங்களில் காலை முதல் மாலை வரை மாமியும், மருமகளும் முட்டிமோதிக்கொள்வார்கள். வீட்டின் சாவிக்கொத்தை கைப்பற்றுவதற்கு மருமகளும், அதைத் தக்கவைத்துக்கொள்வதற்கு மாமியாரும் படாதபாடு படுவார்கள். இதனால் வீட்டில் நிம்மதி நிலைக்காது.
இதுபோல்தான் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தற்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கிடையிலான நீயா, நானா என்ற அதிகாரப் போட்டியால் நாட்டில் அரசியல் குழப்பம் தலைதூக்கியுள்ளது. குறிப்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பாலர் வகுப்பு மாணவர்போல் செயற்பட்டு வருகின்றார்.
நாடாளுமன்றமும், அமைச்சரவையும் அரச தலைவரினதோ அல்லது தலைமை அமைச்சரினதோ குடும்பச் சொத்து கிடையாது. நான் முன்னர் கூறியதுபோல் மாமிக்கும், மருமகளுக்கும் இடையில் சண்டை ஏற்பட்டால்கூட அதனால் இரண்டு குடும்பங்கள்தான் பாதிக்கப்படும். ஆனால், அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையிலான மோதலானது ஒட்டுமொத்த இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருப்பவர்கள் முற்படக் கூடாது. ஒக்ரோபரில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சி,ஏப்ரல் 21 தாக்குதல் போன்றவற்றால் இலங்கையில் இன்னும் அரசியல் உறுதிப்பாடு ஏற்படவில்லை. இதனால் பொருளாதாரமும் ஆட்டம் கண்டுள்ளது. இந்தநிலையில், இரு தலைவர்களுக்கிடையிலான முறுகலானது, அரசியல் உறுதிப்பாடற்ற நிலமையை மேலும் நீடிக்கச்செய்யும்.
அதிகாரப் போட்டியைக் கைவிடுத்து, நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு செயற்பட முன்வருமாறு இருவர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்' என்றுள்ளது. (ஓ.5,22)

## மைத்திரிபாலவின் திட்டத்துக்கு மகிந்த அணி, ஐ.தே.க. எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 19
அரச தலைவர் தேர்தலுக்கு முன்னதாக, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான மக்களின் கருத்தை அறியும் பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கு, மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அதே போன்று ஐக்கிய தேசியக் கட்சியும் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.
அரச தலைவர் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் வகையில், பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரச தலைவர் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.
இதுகுறித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பேசிய, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,
கடந்த ஆண்டு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ், நாடாளுமன்றத்தை நான்கரை ஆண்டுகளுக்கு முன்னதாக கலைப்பதற்கு அரச தலைவருக்கு அதிகாரம் இல்லை. நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு மக்களின் ஆணையைக் கோருவது அர்த்தமற்றது. அரச நிதியை வீணடிக்கின்ற செயல், என்று தெரிவித்தார்.
பொதுவாக்கெடுப்பை நடத்தும் இந்த திட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.
இதுகுறித்து அரச தலைவர் தம்முடன் கலந்துரையாடவில்லை என்றும், நாடாளுமன்றத்திலோ, அமைச்சரவையிலோ யோசனை எதையும் அவர் முன்வைக்கவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
இதனிடையே, நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைப்பதற்கான மக்கள் ஆணையைக் கோரும் பொது வாக்கெடுப்பு நடத்தும் திட்டம் ஏதும் அரச தலைவரிடம் கிடையாது என்று சுதந்திரக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர கூறியுள்ளார். (ஓ.5)

## ஜே.வி.பியின் வேட்பாளர் அடுத்த வாரம் தெரியும்



கொழும்பு, ஜூன் 19
இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தனித்து வேட்பாளரை நிறுத்தும் என்று, அந்தக்கட்சியின்நிறைவேற்றுக் குழு உறுப்பினரான லால் காந்த தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,
அரச தலைவர் தேர்தலில் எமது கட்சியின் நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்தவரே போட்டியிட வேண்டும் என்றும் கட்சி உறுப்பினர்கள் விரும்புகின்றனர். வேறெவரையும் நாங்கள் ஆதரிக்கப் போவதில்லை. அரச தலைவர் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் பெயர் அடுத்த மாத தொடக்கத்தில் வெளியிடப்படும்' என்றும் கூறினார். (ஓ.5)

# நீதிமன்றத்தில் மயங்கிச் சரிந்த எகிப்தின் முன்னாள் அதிபர் சாவு

கெய்ரோ,ஜூன் 19
எகிப்து நாட்டில் ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது அதிபரும், முன்னாள் அதிபருமான முகமது மோர்சிநேற்றுமுன்தினம்நீதிமன்றத்தில் மயங்கி விழுந்து சாவடைந்தார்.
எகிப்தில்அவருடையஆட்சியின்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கொல்வதற்கு உத்தரவிட்டதாக முக அவர் மீதுதொடரப்பட்டவழக்கில்அவருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுப்பின்னர்20ஆண்டுகள்சிறைத் தண்டனையாக குறைக்கப்பட்டது. அத்தோடு அவர் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டு அந்தந்த வழக்குகள் விசா ரிக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில், பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பினருக்கும், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புக்கும் இவருடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி மோர்சி பேசிக்கொண்டிருந்தார். அப்போது திடீரென அவர் மயங்கி விழுந்



தார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லமுற்பட்டபோதுஅவர்சாவடைந்தமை உறுதிசெய்யப்பட்டது. இவரது சாவுஇயற்கையானசாவு அல்ல, திட்டமிட்ட கொலை என்று முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். அதேசமயம், மோர்சியின் உடலில்எந்தவிதமானகாயங்களும், அடிகாயங்களும் இல்லை என மருத்துவர்கள், பொலிஸார் தெரிவித்தனர்.

**பின்னணி**
எகிப்தின் நீண்டகால அதிபராகவும், சர்வாதிகாரியாகவும்இருந்தஹோஸ்னி முபாரக், ஆட்சியில் ,ருந்து நீக்கப்பட்டு 2012ஆம் ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுச் சகோதரத்துவ அமைப்பைச் சேர்ந்த முகம்மது மோர்சி அதிபரானார். அதிபர் பதவியில் ஓர் ஆண்டு மட்டுமே இருந்த முகமது மோர்சிக்கு எதிராகப்போராட்டம்வெடித்தது. சகோதரத்துவ அமைப்பினரும், எதிர்க்கட்சியினரும், மக்களும் போராட்டம் நடத்தினார்கள்.
இதை அடக்க உத்தரவிட்ட மோர்ஸி, போராட்டம்நடத்துபவர்களைக்கொல்லவும் உத்தரவிட்டதாகக் கூறப்படுகிறது. இதில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். அதிபருக்குஎதிரானபோராட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து, அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் அப்தல் பதா அல் சிசி தலைமையிலான இராணுவம், மோர்சியைப் பதவியிலிருந்து நீக்கிக் கைது செய்து சிறையில் அடைத்தது. பின்னர் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு, பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டு, அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டனர்.

# எல்லையில் சிப்பாய்களைக் குவித்து அகதிகளை முடக்கியது மெக்சிக்கோ

மெக்சிக்கோநகர், ஜூன் 19
மெக்சிக்கோவின் தென்பகுதி எல்லை ஊடாகச்சட்டவிரோதமாகஅமெரிக்காவுக்குள்நுழையமுயன்ற800பேரை அந்த எல்லையிலே தடுத்து நிறுத்தியதாகமெக்சிக்கோவின்தேசியகுடிவரவுத் திணைக்களம் தெரிவித்தது.
அந்தஎல்லையோரங்களுக்குச்செய்தி சேகரிக்கச்சென்றபன்னாட்டுச்செய்தியாளர்கள் அங்கு வழமையாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுப்பட்டிருக்கின்ற சிப்பாய்களின் தொகையைவிடத் தேசிய பாதுகாப்புப் படை என்ற பெயரில்மேலும்பலர்எல்லைப்பாதுகாப்புப் பணியில்ஈடுபட்டுள்ளதாகக்கூறுகின்றனர்.
இந்தமேலதிகசிப்பாய்களின்தொகை 6ஆயிரம் வரையில் இருக்கும் என்



றும் தெரிவிக்கப்படுகிறது.

**பின்னணி**
மெக்சிக்கோ எல்லையூடாக அமெரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிகளைத் தடுத்து நிறுத்துவற்காக அமெரிக்கா - மொக்சிக்கோ இடையே எல்லைச் சுவர் கட்டுவதாகக் கடந்த தேர்தல் பரப்புரைகளின்போது வாக்குறுதியளித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அந்தத் தேர்தலில் வெற்றியும் பெற்றார். ஆனால், அந்த எல்லைச்சுவருக்கான நிதியை ஒதுக்குவதற்கு நாடாளுமன்ற அனுமதி கிடைக்கவில்லை. இந்த நிலையில் மெக்சிக்கோவிலிருந்து இறக்குமதியாகின்ற பொருள்களுக்கான வரியை அதிகரித்தார்.
இதனால், மெக்சிக்கோ அரசு - ட்ரம்ப் இடையேஓர்உடன்படிக்கைஎட்டப்பட்டது. மெக்சிக்கோவின் அகதிகள் ஊடுருவலைநிறுத்தினால்வரிகளைநீக்குவதாகக் குறிப்பிட்டார் ட்ரம்ப். இதன் எதிரொலியாகத் தனது எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்துகிறது மெக்சிக்கோ. அடுத்த தேர்தலில் போட்டியிடத்தயாராகிறார் ட்ரம்ப்.

# 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கஞ்சா! கல்லறை ஆய்வொன்றில் கண்டுபிடிப்பு





பீஜிங், ஜூன் 18
சீனாவின்மேற்குப்பகுதியில்பாமிர் மலையின் உச்சியில் அமைந்துள்ள ஜிர்சங்கால் என்கிற பழங்காலத்துக் கல்லறையில் இருந்து கஞ்சாபயன்படுத்தியதற்கானஆதாரங்களைஆராய்ச்சியாளர்கள்கண்டறிந்தனர்.
அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தியதில், அவைசுமார்2ஆயிரத்து500 ஆண்டுகளுக்கு முன்னர் புகைத்தலுக்குப்பயன்பட்டிருக்கலாம்என்று தெரியவந்துள்ளது. மத ரீதியிலான சடங்குகளின் ஒரு பகுதியாக இது பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.
மேற்குறித்த பழங்காலக் கல்லறைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள தீச்சட்டிஒன்றிலேயேகஞ்சாபயன்படுத்தப்பட்டதற்கான இந்த ஆதாரம் கிடைத்துள்ளது.
இந்தத் தீச்சட்டியில் கண்ணுக்கு தெரியாத நிலையில் இருந்த சேர்மங்களைக் கண்டறிவதற்காக ஆராய்ச்சியாளர்கள்'குரோமடோகிராபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி' என்ற செயல்முறையைப் பயன்படுத்திக்கஞ்சாவின்இருப்பைஉறுதி செய்தனர்.
தீச்சட்டியில் சூடான கற்களையும், கஞ்சா செடியின் இலைகளையும் போட்டு அதிலிருந்து வரும் புகையைச் சுவாசித்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் சந்தேகிக்கின்றனர்.
மூளையைப்பாதிக்கக்கூடியபண்புகளுக்காகக்கஞ்சாபயன்படுத்தப்பட்டதுஇதுவேமுதல்முறையாகஇருக்கும் என்று கருதப்படுகிறது.
இறுதிச் சடங்குகளின்போது இவை எரிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.



## இன்றைய நாள்

**மேடம்:** சுயநலத்துடன் சிலர் உதவி செய்ய முன் வருவர். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் பலம் பெறும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**இடபம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில் வியாபாரம் சீர் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிம்மம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடுகிற சிரமத்தை சரி செய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணக்கடனில்பெரும்பகுதியைச்செலுத்துவீர்கள்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். பிள்ளையைக் கண்டிப்பதில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையைஅறிந்துநிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு.


**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச் சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். உறவினர் வருகை யால் பெண்களுக்கு வீட்டுச் செலவு எகிறும். உடல்நலனுக்காக சிகிச்சை தேவைப்படலாம்.

புதன் பொய்கை
@UthayanPrint
ஜூன் 19, 2019

இராமபுரத்தூர் நிஷாந்தன்

# நளவெண்பாவில் தமயந்தியின் அழகு



தமிழ் இலக்கிய உலகு பிரசவித்த இலக்கியங்களில் வெண்பாவில் பாடப்பட்ட ஓர் இலக்கியம் நள வெண்பாவாகும். மகாபாரதக் கதையின் கிளைக் கதையாக விளங்கும் வரலாற்றைப் புகழேந் திப் புலவர் தன் கவிப் புலமையால் இலக்கிய இரசனை கொண்டதாக நளவெண்பா எனும் பெயரில் இயற்றினார். சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என மூன்று காண்டங்களில் நானூறு வரையான வெண்பாவில் அமையப் பெற்ற பாடல்கள் இந்த நூலில் அமைவுறுகின்றன.

**நளவெண்பாவின் தலைவி தமயந்தி**

நளவெண்பாவின் பாட்டுடைத் தலைவன் நளன் என்றால், அந்த இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவி தமயந்தியாவாள். விதர்ப்ப தேசத்தின் மன்னனாகிய வீமனின் பெருமை மிக்க மகளாக பிறந்தவளே இந்தத் தமயந்தி.

வீமனது குலத்தில் பிறந்த ஒப்பற்ற பெருமை மிக்கவள், திருமகள் போன்ற அழகு படைத்த வள், தன் அழகைச் சுமப்பதனால் இளைத்த உடலை உடையவள், வண்டுகள் விரும்புகின்ற கருமையான கூந்தலை கொண்டவள், அவளே, மன்மதனின் காதல் எனும் செல்வத்துக்குச் சிறப் பான பாதுகாவலாய் அமைந்திருப்பவள் இப்படி யான பல சிறப்பியல்புகளைக் கொண்டவளே இந்தத்தமய்ந்தி. நளவெண்பாவில்புகழேந்தியார் காப்பியம் செய்கின்ற தமயந்தியின் அழகியல் வர்ணிப்பின் சிறப்பை இங்கு காண்போம் வாருங்கள்.

**அழகினால் ஆட்சி புரிபவள்**

தமயந்தி தன் அழகை ஆதாரமாகக் கொண்டு ஒரு பெண்மை எனும் இராட் சியத்தை ஆட்சி செய்பவள் என்கின்றார் புகழேந்தி.

நாற் குணமும் நாற் படையாய் ஐம்புலனும்
நல்லமைச்சாய்
ஆர்க்கும் சிலம்பே அணி முரசாய்
வேற் படையும்
வாளுமே கண்ணாய் வதன மதிக்
குடைக் கீழ் ஆளுமே பெண்மை அரசு



தனது, அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு எனும் நாற் குணங்களையும் தேர், யானை, குதிரை, காலாள் எனும் நான்கு வகையான சேனைகளாகவும், மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐம்பொறிகளை அறி வில் சிறந்த நல் அமைச்சர்களாகவும் கொண்டு, தன் காலில் அணிந்துள்ள ஓசை செய்யும் சிலம்பை அழ கிய ஒலிக்கின்ற பேரிகையாகவும், தன் இரு கண்களை வேற்படையாகவும், வாற்படையாகவும் கொண்டு, முகம் எனும் அழகிய வெண்கொற்றக் குடையின் கீழ் இயல்பாகவே ஆட்சி புரிகின்றவள் தமயந்தி என கவி நயம் காட்டுகின்றார் புகழேந்தியார்.

**துவளும் மெல்லிடை கொண்டவள் தமயந்தி**

தமயந்தியின் இடையழகை நுட்பமாகவே வர்ணிக்கின் றார் புகழேந்தி.

அதாவது, தமயந்தியின் கூந்தலில் உள்ள மலர்களின் தேனை பருகிட வருகின்ற ஆறு கால்களையுடைய சிறிய பறவையாகிய வண்டுகள் தன் அழகிய சிறிய சிறகுகளினால் உண்டாக்கும் மென்மையான காற்றுக் கும் தாங்கப் பெறாது மெலிவடைந்து அவளது இடையா னது துவளுமாம். பாடல் இது தான்,

என்றும் நுடங்கும் இடையென்பர் ஏழுலகும்
நின்ற கவிகை நிழல் வேந்தே ஒன்றி
அறுகால் சிறு பறவை அஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக்கு ஆற்றாது தேய்ந்து

அடடா, வண்டுகளின் சிறகுகள் எவ்வளவு சிறியவை, அத்துடன் அவை எத்துணை மென்மையானவை. அவற்றின் சிறகுகளின் காற்றுக்கே தாங்க முடியாது வருந்துகின்ற சிறிய இடையினைக் கொண்டவள் தமயந்தி எனவாறு நயக்கின்றார் புகழேந்தியார்.

**சிலம்புகளின் புலம்பல்**

தமயந்தியின் மெல்லிய இடையானது அவ ளது இளமை பொருந்திய தனங்களை வாழ் நாள் முழுவதும் சுமந்து நிற்கும் தன்மை கொண்டது எனக் கருதி அவளது திருவடிகளில் பொருந்தியுள்ள சிலம்புகள் வாய் விட்டுப் புலம் புகின்றனவாம். அதாவது தனங்கள் பாரமு டையனவாம். அவற்றை மெல்லிய இடையா னது தாங்காமல் ஒடிந்து விடுமாம். இதை நினைத்து கால்களில் உள்ள சிலம்புகள் புலம்புகின்றனவாம். பாடல் இது தான்.

மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டாது இடை என்று வாய் விட்டு நாட் தேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு
அடடா என்ன ஒரு கற்பனை

**பிறை போன்ற நெற்றி கொண்டவள் தமயந்தி**


தமயந்தியின் அழகு நலன்களை மிகுதியான கற்பனை நயம் வெளிப்பட வர்ணிக்கின்றார் புகழேந்தியார். தமயந்தியின் நெற்றியழகினை பின்வருமாறு காப்பியம் செய்கின்றார்.

செந்தேன் மொழியாள் செறியளாக பந்தியின் கீழ்
இந்து முறி என்று இயம்புவர் வந்து என்றும்
பூவாளி வேந்தன் பொரு வெஞ்சிலை சார்த்தி
ஏவாளி தீட்டும் இடம்

அதாவது, தேன் போன்ற இனிய சொற்களை பேசுகின்ற தமயந்தியின் நெருங்கிய கூந்தல் வரிசையின் பக்கத்தில் உள்ள பிறைத் துண்டு எனச் சொல்லப்படும் நெற்றியைக் கொண்டவள் அவள். மேலும் மலரம்புகளை உடைய மன்மதன் எக் காலத்திலும் வந்து காதல் போர் செய்கின்ற தன் கரும்பு வில்லை பொருந்த வைத்து, தன் மலர் அம்புகளின் முனைகளை தீட்டி கூர்மை செய்யும் இடம் எதுவெனில் அதுவும் தமயந்தியின் அந்த பிறை என்று சொல்லுகின்ற நெற்றியே.

**அன்னமும் நாணும்**
**தமயந்தியின் நடையழகு**

நளன் எனும் மன்னவனுக்கு தமயந்தியின் அழகு நலன்களை உரைக்கின்றது அன்னம். அப்போது நளன் தமயந்திக்கும் உனக்கும் எவ்வாறு தொடர்பு உண்டானது என அன்னத்திடம் வினவுகின்றான். அப்போது அன்னம் பின்வருமாறு பதிலுரைக்கின்றது. பாடலைக் காணுங்கள்.



பூமனை வாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவள் தன்
மாமனை வாய் வாழும் மயிற் குலங்கள் காமன்
படை கற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடை கற்பான் வந்தடைந்தோம் நாம்

தமயந்தியானவள் தனது விழியாகிய அம்பினை எய்து காண்பவரை வீழ்த்துவதைக் கண்டு காதலின் அதிபதியாகிய மன்மதன் தன் மலரம்புளை எய்து பழகிக் கொள்ள தமயந்தி இருக்குமிடம் வந்து சேர்ந்தான்.
நாங்களோ அத் தமயந்தியிடம் நடையைக் கற்பதற்காக அவளிடத்தில் பழக்கம் கொண்டோம். ஏனெனில் நடையழகில் சிறந்தவர் நாங்களே என நாம் கர்வம் கொண்டிருந்தோம். ஆனால் தமயந்தியின் நடையோ எங்களை நாணம் கொள்ள வைத்து விட்டது என்கின்றது அன்னம்.

**தமயந்தி எனும் அன்னம்**

தமயந்தியின் சுயம்வரம் நடைபெறுகின்றது. தமயந்தியின் பேரழகினைக் கேண்மையுற்ற தேவர்களும், மண்ணுல மன்னர்களும் அச் சுயம்வர மண்டபத்தில் கூடியிருக்கின்றனர். அவ்வேளையில் தமயந்தி சுயம்வர மண்டபத்தினுள் தன் தோழியர் சூழ வந்தடைந்தாள்.
அப்போது அங்கிருந்த மன்னர்களின் பார்வைகள் எல்லாம் தமயந்தியை நோக்கிப் பாய்கின்றன. அவ்வாறு மன்னர்களின் விழியாகிய பார்வை நிறைந்திருந்த அவ் சுயம்வர மண்டபத்தில் அன்னம் போல வருகை தந்த தமயந்தியை புகழேந்தி அழகுற வர்ணிக்கின்றார்.

மன்னர் விழித் தாமரை புத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்
புக்காள் மின் நிறத்து
செய்யதாள் வெள்ளைச் சிறை அன்னம் செங்கமலப்
பொய்கை வாய்ப் போவதே போன்று

அதாவது, சிவந்த கால்களையும், வெண்மையான சிறகுகளையும் உடைய அன்னப் பறவை செந்தாமரை மலர்கள் மலர்ந்துள்ள நீர்த் தடாகத்தில் செல்வதைப் போல, திருமகளைப் போன்று அழகுடைய தமயந்தி அரசர்களின் கண்களாகிய தாமரை மலர்கள் மலர்ந்துள்ள சுயம்வர மண்டபத்தில் நடந்து செல்கின்றாள்.
இங்கு சுயம்வர மண்டபம் தடாகமாம். அதில் மலர்ந்த தாமரை மலர்கள் மன்னர்களின் கண்களாம், அந்தத் தடாகத்தில் நடந்து வந்த அன்னம் தமயந்தியாம்.



ஆகா. தமயந்தி அன்னம் போல் அங்கு நடந்து வந்தாள் என நயக்கின்றார் புகழேந்திப்புலவர்.







## பருத்தித்துறையில் சிறப்புற இடம்பெற்ற

# சிலப்பதிகார ஆய்வு நூல் வெளியீடு



பெரிய ஐங்கரன் எழுதிய இளங்கோவடிகளின் கவித்திறன் (சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வு) என்ற நூலின் வெளியீட்டு விழாவும் பேரறிஞர் கந்த முருகேசனாரின் 54ஆவது நினைவு தின வைபவமும் பருத்தித்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிறு காலை நடைபெற்றது.
புற்றளை மகா வித்தியாலய அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்து கொண்டார். மூத்த பேராசிரியர் மா.நடராச சுந்தரம் முன்னிலை வகித்தார். ஆங்கிலப் போதனாசிரியர் அ.பிரதாபன் வரவேற்புரையையும் துணுக்காய் பிரதேச செயலக கலாசார அலுவலர் சிவ.முகுந்தன் வெளியீட்டுரையையும் ஆற்றினர்.



நூல் நயப்புரையைப் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் ஆற்றினார். நன்றியுரையை ச.கருணாகரன் ஆற்றினார். நூலைப் பிரதேச செயலர் வெளியிட்டு வைக்க முதன்மைப் பிரதிகளை த.கதிர்காமநாதன், மா.மணிமாறன், பா.இராஜகுலேந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.
சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்ற பாடலில் வரும் திங்கள் கண்ணகியின் புகார்க்காண்ட வாழ்வியலையும் சூரியன் அவள் மதுரையில் எழுச்சி பெறுவதையும் மாமழை சேரநாட்டில் தெய்வமாவதையும் படிமமாகச் சுட்டுவதாக இந்த நூல் படைக்கப்பட்டுள்ளது.

எழுதப்படாத நாடக வரலாறு - 05

# குரங்குகள்போல் ஆகாமல் அதற்கு குறைந்த குழப்படிகள் செய்யலாம்

தேவநாயகம் தேவானந்

எழுதப்படாத ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் தமிழர்களின் துயர் படிந்த கடந்த காலங்களின் பதிவுகளாக அமைந்த நாடகங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியன வாகின்றன. இவற்றைப் பதியாது விடுதல் காலத் தவறாகும். அந்த அடிப்படையில் ஈழப்போராட் டத்தை கூர்மையடையச்செய்த முக்கியமான வர லாற்று நிகழ்வாகத் தமிழர்களின் பொக்கிசமாக இருந்த யாழ்ப்பாண பொதுநூலக எரிப்பு பார்க்கப் படுகின்றது. இதனைப் பதிவுசெய்த முக்கியமான நாடகம் கவிஞர் முருகையனின் 'வெறியாட்டு'.

"யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்டதை, அழி யாத அந்த வடுவை அந்த எரியூட்டலை நிகழ்த்தி



கவிஞர் இ.முருகையன்

வெறியாட்டம் ஆடி மகிழ்ந்த வெறிக்கூட்டத்தைத் தோலுரித்துக்காட்ட, மிகுந்த நிதானத்தோடும், கலை இலக்கிய கோட்பாட்டினப்படையில் ஆழ மான கவித்துவத்தால் அந்த நாடகம் பின்னப்பட்டுள் ளது" என்று வெறியாட்டு நாடகத்தை நெறிப்படுத் திய வி.எம்.குகராஜா குறிப்பிடுகிறார்.

✦✦✦✦

வெறியாட்டில் நூலகத்தை ஒரு பூங்காவாகவும் அதன் உண்மையான வேலிகளாகப் பூவரசுகள் இருப்பதாகவும் உவமைப்படுத்துகிறது. பூங்கா வின் பாதுகாப்புக்குப் போலியான வேலிகளாக கண் டன், சுண்டன், மிண்டன், வண்டன், தொண்டன, திண்டன் என்போர் நியமிக்கப்படுகிறார்கள். அவர் களே பூங்காவை நாசமாக்குகிறார்கள் என்ற எளி மையான கதையை அடிப்படையாகக் கொண்டே நாடகம் நகர்கிறது. முருகையன் எளிமையான நாடக வடிவத்தை தேர்ந்தெடுத்து அனைவருக்கும் விளங்கக்கூடிய காட்சிப் பெறுமானத்தைக் கொடுக் கிறார். அவரது கவித்துவத்தால் எளிமையான நாடகவடிவம் காத்திரமான செறிவைப் பெறுகிறது. நாடகத்தில் பிரமுகர் என்பார் அரசின் பிரதிநிதியாகக் சுட்டப்படுகிறார். அவரது கட்டளைப்படி அடியாள்கள் வேலியாக நின்று பயிரை மேய்கிறார்கள். இர வெல்லாம் அசையாமல் காவல் நின்ற இயல்பாலே. வேலியர் இணைந்திருப்பீர் பரவியுள்ள பகல் ஒளி யில் நீங்கள் எல்லாம் பாய்ந்து துள்ளிவிளையாடக் கடவீர் என்று தருகின்ற ஆணை இது என்று பிரமு கரின் கட்டளை தொடங்குகிறது. பின்னர் அதுமேலும் நீண்டு கட்டற்ற அதிகாரத்தை தம் கையாள்களுக்கு வழங்குவதாக முருகையன் குறிப்பிடு கின்றார்.

"மரங்களிலே ஏறலாம்
இறங்கிவந்து
வளையமிட்டுத் திரியலாம்
விருப்பமானால்
குரங்குகள் போல் ஆகாமல்
அதற்கு குறைந்த
குழப்படிகள் செய்யலாம்
அனுமதித்தோம்
இருங்கள் என்று சொல்லி நாம் அடக்கவில்லை
என்னென்ன விருப்பம் உண்டோ
அவை செய்யுங்கள்
இரங்கி இந்த அனுமதிகள் வழங்குகின்றோம்"

ஒரு நாற்பதாண்டுகள் கடந்து ஒரு படைப்பில் சொல் லப்பட்ட விடயங்கள் இன்றைய காலத்துடன் பொருந்துவது கண்டு வியக்காமல் இருக்க முடிய வில்லை. செம்மலையில் பாரம்பரியமாக இருந்த பிள்ளையார் கோவில் இல்லை என்று பிக்குகள் அடம்பிடிப்பது தொடக்கம் "அரசியல்வாதிகள் தலை யிட வேண்டாம் நாட்டைப் பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று பகிரங்கமாகப் புத் தபிக்குகள் அரசியலில் தலையிடுவதுவரை எல் லாமே பொருத்துகின்றன. இலங்கையில் அரசியல் வாதிகளின் ஆசீர்வாதம் இல்லாமல் இவையெல் லாம் நடக்கவாய்ப்பில்லை இதனையே முருகை யன் அற்புதமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

✦✦✦✦

பிரமுகர் சொல்கிறார்.

"இருங்கள் என்று சொல்லி நாம் அடக்கவில்லை
என்னென்ன விருப்பம் உண்டோ அவை செய்யுங்கள்
இரங்கி இந்த அனுமதிகள் வழங்குகின்றோம்"

இந்த கட்டற்ற அனுமதியால் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் தமிழரின் பொக்கிச மான யாழ்ப்பாண நூலகம் எரிந்து சாம்பராகியது என்ற அவரது ஆதங்கம் படைப்பில் துலங்கு கின் றது. நூலக எரிப்பென்பது தமிழர் பண்பாட்டை அழித்தல் என்பதாகும். எந்தவொரு நாகரிக சமூக மும் செய்யாத ஒரு செயலாகும்.

"பூவரசே....உன்...னை
நீறுப...டும்படி...யாய்
கீறி எறிந்திடுவேன்
கேடுகள் செய்திடுவேன்"

என்று வேதாள முகமூடியணிந்து வெறியாட்டம் ஆடுவோர் பாடுவதாக நாடகத்தில் காட்டப்படுகிறது. சொத்துக்கள் எல்லாம் துகளாகிப் போகட்டும் பூங்காவைச் சுற்றிப் பொழிந்த பெற்றோல் பற்றிய தீ

காங்கேயன், வல்லி, கனகசபை, மூத்ததம்பி
பூபாலி, வேலன், புலேந்திரன், பொன்னையன்,
காவேரி, அம்மை, கயிலாயன், முத்தையன்
சீலாவதி, எல்.சிநேகலதா என்றெல்லாம்
யாவாரம் செய்கிற எல்லாரின் பண்டமுமே
சாம்பலாய்ப் போகத் தகனம் புரியட்டும்

என்று பேயாட்டம் நீள்கிறது. தமிழர் தம் வரலாற் றிலும் இதே பேயாட்டம் உயிர்களையும் சொத்துக் களையும் பண்பாட்டையும் தாண்டவமாடி அழித் தொழித்திருக்கிறது.

இந்த அழிவுகளின் மத்தியிலும் நாடகம் நம்பிக்கை யூட்டுகிறது. இதற்கு ஔவையாரைத் துணைக்கி முக்கிறார் நாடகாசிரியர்.

பெற்றபுத்திரர் திக்குகள் தோறும்
திக்கில்லாதுதிகைத்துநிக்கவும்
திரைகடல் ஓடா
திரவியந் தேடா!
என்று துரத்தினாள் என்கிறார். அவர் சொன்னது போலவே ஈழப்போர் பலரை நாட்டைவிட்டு ஓடி



திரவியம் தேடவைத்ததுபோலும். "புதியதொரு பூங்கா செய்வோம். பழைய வறட்சிகள் பாழ்படும் படியே" என்ற நம்பிக்கையோடு நாடகம் முடிகிறது.

(தொடரும்)

**யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப் பட்டதை, அழியாத அந்த வடுவை அந்த எரியூட்டலை நிகழ்த்தி வெறி யாட்டம் ஆடி மகிழ்ந்த வெறிக்கூட்டத் தைத் தோலுரித்துக்காட்ட, மிகுந்த நிதானத்தோடும், கலை இலக்கிய கோட்பாட்டினப்படையில் ஆழமான கவித்துவத்தினால் அந்த நாடகம் பின்னப்பட்டுள்ளது என்று வெறி யாட்டு நாடகத்தை நெறிப்படுத்திய வி.எம்.குகராஜா குறிப்பிடுகிறார்.**

# மனிதருள்ளும் புனிதராக வாழ்ந்த மாணிக்கம்

## அமரர் சதாசிவம் மாணிக்கவாசகர்

கருடன்

தீவகத்தின் பெரும் விருட்சமாகவும் வேலணையின் முதுசொமாகவும் மனிதருள்ளும் தேவராகவும் ஆன்மிக ஒளிவிளக்காகவும் அரசியல் ஞானியாகவும் விளங்கிய ஒப்புரவாளரே அமரர் சதாசிவம் மாணிக்கவாசகர் ஆவார்.

கல்வியே கருந்தனமாகிய தீவகமே இலங்கையின் சொத்தாகவும் பண்பாடு கலாசாரத்தின் வித்தாகவும் அன்றும் இன்றும் என்றும் விளங்குகின்றது. அத்தகு பாரம்பரியத்தில் விளைந்த சதாசிவம் மாரிமுத்து தம்பதிகளுக்கு வாய்த்த புத்திரனாகவும் புத்திமானாகவும் விளங்கியவரே மாணிக்கவாசகர் ஆவார். 1929ஆம் ஆண்டு டிசெம்பரில் இவருடைய ஜாதகத்தில் குருவின் பார்வை குடும்பத்தையே வரலாற்றாக்கியது.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கிணங்க தந்தையாரான சதாசிவமும் தாயாரான மாரிமுத்து அம்மாவும் இவரை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாலயத்திலும் கல்வியை முறையாகக் கற்கவும் காத்திரமாகத் தொடரவும் வழி சமைத்தனர்.

பெற்றோரின் தயவு, தாட்சண்யம், தாற்பரியம், தலைமைத்துவம், மண்வாசனை, சமய மார்க்கம், சாஸ்திரி நம்பிக்கை யாவுமே ஒன்று சேர்ந்து மாணிக்கவாசகரை மாணவப் பருவத்திலேயே மாணிக்கமாக்கிற்று.

1956, 1957ஆம் ஆண்டுகளிலே நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருட பயிற்சியோடு பயிற்றப்பட்ட ஆசிரியராக நியமனம் பெற்றார். முல்லைத்தீவிலும் கொழும்பினிலும் யாழ்ப்பாணம்- தீவகத்திலும் மொத்தம் இருபத்தெட்டு வருடங்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பணியாற்றினார்.

கொழும்பு முகத்துவாரம் ஹம்சா வித்தியாலயம், வற்றாப்பளை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை, வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் செவ்வனவே கடமையாற்றிவரும் ஒரு மாணவப் பரம்பரையை உருவாக்கினார். வல்லதொரு தலைமைத்துவம் அவரிடத்தில் வேரூன்றியமையால் அவரிடம் பயின்ற மாணவர்களிடத்தும் பன்முகத் தலைமைத்துவம் ஓங்கி வளர்ந்தது. ஏனைய மாணவ மணிகளைப் பல்துறைகளிலும் வளர்த்தது போல தம்பிள்ளைகளையும் நீதி, வைத்தியம், விளையாட்டு, பொதுப்பணி, ஆன்மிக மேம்பாடுகளில் உச்சம் தொட வைத்தார்.

இவருடைய மண்வாசனை, ஆன்மிகப்பற்று, அரசியல்பற்று, மொழிப்பற்றுக் காரணமாக வேலணை கிராம மக்கள் இவரை வேலணை கிராம அபிவிருத்திச் சங்க இரண்டாம் வட்டாரத்துக்கு அங்கத்தவராகத் தெரிவு செய்தனர். தனது சொந்தக் காணியை பொது வீதிக்காகக் கொடுத்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வீதியென பெயர் சூட்டி தமிழ்ப் பற்றுக்கும் தமிழ் இனத்துக்கும் ஒரு விடிவெள்ளியானார்.



மற்றும் நலிவுற்ற குடும்பங்களின் ஜீவனோபாயத்துக் காக வேலணை மேற்கில் நெசவு சாலைகள் அமைத்து மாதாந்த வருமானத்துக்கு வழிசமைத்தார்.

குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் முகமாக வேலணை கிழக்கில் நன்னீர் தொட்டிகளை உருவாக்கி குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கியருளினார். மேலும் சிறுசிறு குச்சொழுங்குகளையும் வீதிகளையும் அகலப்படுத்துவதற்கு உரியவர்களோடு கதைத்து பெருப்பிக்கவும் தார் ஊற்றவும் ஆவன புரிந்தார்.

> குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் முகமாக வேலணை கிழக்கில் நன்னீர் தொட்டிகளை உருவாக்கி குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கியருளினார். மேலும் சிறுசிறு குச்சொழுங் குகளையும் வீதிகளையும் அகலப்படுத்துவதற்கு உரியவர்களோடு கதைத்து பெருப்பிக்கவும் தார் ஊற்றவும் ஆவன புரிந்தார்.

மிகமிக முக்கியமான சாதனையாக வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கச் செயலராக இருக்கும்போது மாபெரும் திருக்குறள் மாநாட்டை நடத்தியமை வரலாற்றில் பதிவிடப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மிளிர்ந்த அமரர்கள் வி.நவரத்தினம், கா.பொ.இரத்தினம் ஆகியோருடன் இணைந்த அமரர் மாணிக்க வாசகர் தமிழன்னைக்கு இம்மகாநாட்டின் மூலம் மகுடம் சூட்டினார்.

துலாக்கோல் போல் நடுவு நிலையிலிருந்து தவறாதிருத்தல் நல்லவர்களுக்கு அழகாகும். மேலும் மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீரபிற என்பதனை வலியுறுத்துவதாக நடுவுநிலைமையையும் குற்றமற்ற மனத்தையும் முதன்மைப்படுத்தியன் பிரகாரம் இலங்கையானது இவரது மகனுடைய நீதிக்காய் தவமிருக்கிறது. நீதி தேவதை கண்விழிக்குமாறு நீதியை வழங்கி வரும் பாங்கும் நியாதிக்க பரோபகாரமும் மாணிக்கவாசகரையும் அவர்தம் பத்தினியாகிய சிவபாக்கிய அம்மாவையுமே சாரும். இருவருமே உப அதிபர்களாக விளங்கி எம் நாட்டுக்கு ஒளிவிளக்காக இருந்துவரும் வேளை மாணிக்கவாசகர் எனும் பெருந்தகையாளர் தனியாக வானுலகில் ஆள்வதற்காய் 10.05.2019இல் விரைந்தமையானது ஆயிரமாயிரமான மக்களைக் கண்ணீரால் நனைத்தது. அவரது ஆத்மா சாந்தி பெறுவதாக.

## சமாதான நீதிவான்களாக பதவியேற்பு



கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த ராஜகோபால் ராஜ்குமார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில், நீதிவான் கணேசராஜா முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றார். இவர் தமிழ் சிங்கள மொழிப்பெயர்பாளராகவும், சமூக செயற்பாட்டாளராகவும் இருந்து வருகின்றார். இதேவேளை கிளிநொச்சி விவேகா னந்தநகரைச் சேர்ந்த நாகநாதன் சந்திரமோகனும் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் பதவியேற்றார். இவர் தகவல் தொழிநுட்பப் பாட ஆசிரிய ஆலோசகரும், சமூக செயற்பாட்டாளராகவும் இருந்து வருகின்றார்.

# தாய் மொழி




பிறந்து சிறந்த மொழி அல்ல தமிழ் ,
சிறந்து பிறந்த மொழி எங்கள் தமிழ் .

உயிருக்கு உயிர் எழுத்தாய்
மெய்க்கு மெய் எழுத்தாய்
உலகுக்கு உயிர்மெய் எழுத்தாய் விளங்கும் தமிழ் .

மொழிகளின் பிறப்பிடம் தமிழ் என்போம்
தமிழின் பிறப்பிடம் குமரி என்போம்

ஊமையாய் திரிந்து
செய்கையாய் மாற்றம் பெற்று
ஒலியாய் ஒலித்து
பின் வரியாய் நீ வடிவெடுத்தாய் ..

உன்னை செப்பம் செய்கையில்
செந்தமிழ் ஆனாய்...

செந்தமிழில் இருந்து
வேறுபட்டு பேசையிலே எழுதையிலே
கொடுந்தமிழ் ஆனாய்...

பிற மொழிகளிடம் இருந்து
தனித்து நிற்கையில்
தனிதமிழ் ஆனாய்..

இயன்ற வரை
நற்சொல் கொண்டு பேசையிலே
நற்றமிழ் ஆனாய்..

பண்ணிசைத்து பாடையில் இசைத்தமிழ் ஆனாய்..
இயல்பாக பேசையில் இயல் தமிழ் ஆனாய்..
கூத்தாடி பாடையில் நாடக தமிழ் ஆனாய்..

இயல் இசை நாடகம்
இவைகளுடன் இணைந்து
முத்தமிழ் ஆனாய்..

பேச்சிலே வேறுபட்டாலும்
எழுதையிலே ஒன்றாய்

குமரியில் பிறந்தாலும்
தென் மேற்கு வட கிழக்கு என
பல கிளை மொழியானாய் ..

இத்தனை பெருமைகளை கொண்ட உன்னை
பிற மொழி கலப்பால் கலங்க படுத்தினோம்
தனி மொழி தாய் மொழி என பெருமை பட வேண்டிய உன்னை
பிற மொழி முன் மொழி என வெறுத்து ஒதுக்கினோம்

பிற மொழியில் பேசும் மூடர்க்கு தெரியாது
பிற மொழியின் பிறப்பிடமே நீ தான் என்று ..

தமிழன் அழியும் வரை அல்ல
மனிதன் அழியும் வரை தமிழ் அழியாது
கற் தோன்றி மண் தோன்றா காலத்தே
முன் தோன்றிய மொழி தமிழ் மொழி..

ஆதி அந்தம் தமிழே
வாழ்க தமிழ் வளர்க தமிழ் .....

நன்றி இணையம்

# இருபாலையில் பெண் கொலை: சந்தேகநபருக்கு 14 நாள் மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

இருபாலையில் நேற்றுமுன்தினம் இளம் பெண் ஒருவர் கழுத்தில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சந்தேகநபர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்பட்டபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இருபாலை கந்தவேள் பாடசாலைக்கு முன்பாக நடந்தது. இந்தக் கொடூரச் சம்பவத்துக்குக் காணிப் பிணக்கே காரணம் என்று கூறப்படுகின்றது. காணிப் பிணக்கால் அயலவர்களான உறவினர்களுக்கு இடையே நீண்ட காலமாகப் பிணக்கு இருந்தது என்றும் அதன் தொடர்ச்சியாகத் சிறிய தந்தை இந்தக் கொடூரச் செயலைப் புரிந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

கந்தவேள் பாடசாலைக் முன்பாக வைத்துச் சிறிய தந்தை பெறாமகனுக்கு வயிற்றில் கத்தியால் குத்தியுள்ளார். அவர் நிலத்தில் சரிந்து விழுந்துள்ளார். கத்தியால் குத்தியவர் ஈருருளியில் ஏறிக் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குப் புறப்பட்டுள்ளார். அப்போது வழியில் பெறாமகளைக் கண்டுள்ளார். அவரைக் கத்தியால் குத்த முயன்றபோது அந்தப் பெண் சிறிய தந்தையை தள்ளி வீழ்த்தி விட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

அவரைச் சிறிய தந்தை துரத்திச் சென்றுள்ளார். தப்பியோடிய பெண் தடுமாறி விழுந்தபோது சிறிய தந்தை அவரது கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருபாலை விளம் வீதியைச் சேர்ந்த பா.பரிதா (வயது30) என்பவரே உயிரிழந்துள்ளார். அவரது மூத்த சகோதரன் பா.ஜெயபாலன் (வயது35) காயத்துடன் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர் பொலிஸாரிடம் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (எ-26)

---

## இனக் குரோதம்...

யட்டிநுவர, தியகெலினாவ, கிந்சிறிமேவன் ரஜமகா விகாரையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் சிங்கள மக்களை அழிக்கும் வகையில் செயற்படுகின்றனர். அது கண்டனத்துக்குரியது. அவ்வகையான செயற்பாடுகள் தற்போது பகிரங்கத்துக்கு வந்துள்ளன. எமது மக்கள் கவனமாக இருக்க வேண்டும். மருத்துவர் ஒருவர் இலட்சக்கணக்கான எமது குழந்தைகளை இல்லாது ஆக்கியுள்ளார். சிங்கள இனத்தை அழிக்க நினைக்கும் தேசத் துரோகிகளைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என்று பலர் என்னிடம் கூறினர். அப்படிச் செய்யுங்கள் என்று நான் கூற மாட்டேன். ஆனால் அது செய்யப்பட வேண்டியது தான். நாட்டையும், மக்களையும் நேசிக்கும் தலைவர்களை மட்டும் மக்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-22)

## அரச...

எதிர்வரும் நவம்பர் மாதம் 16, 23, 30 ஆகிய திகதிகளே தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் திகதிகளில் ஒரு தினத்தில் அரச தலைவர் தேர்தல் நடைபெறும் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

இந்த 3 திகதிகளுக்காகத் தயார் செய்யப்பட்ட 3 அட்டவணைகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் இறுதி செய்யப்பட்டு, தேர்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதேவேளை இந்த 3 திகதிகளில் ஒரு திகதி உறுதி செய்யப்பட்டு, உறுதி செய்யப்பட்ட திகதிக்கான அட்டவணைக்குரிய பட்டியல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறும் என்று கூறியிருந்தார். அவர் இந்தியா சென்றிருந்த போது இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார். ஆனால் தேர்தல்கள் திணைக்களம் அந்தத் திகதியைத் தெரிவு செய்யவில்லை என்று முன்னர் உதயன் சுட்டிக்காட்டியிருந்தது. (எ-105)

## குற்றஞ்சாட்டப்பட்ட...

சேவைக்காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கு

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார் என அறியமுடிகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி நிறைவடையவிருந்த சவேந்திர சில்வாவின் சேவைக்காலத்தை டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடித்து அனுமதி வழங்கியுள்ளார் மைத்திரிபால சிறிசேன.

எதிர்வரும் ஒக்ரோபர் 18ஆம் திகதி தற்போதைய இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவின் பதவிக்காலம் முடிவடையவுள்ளதால் அதன் பின்னர் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்படும் வாய்ப்பு உள்ளது எனத் தெரியவருகின்றது.

அடுத்த இராணுவத் தளபதி பதவிக்குப் பொருத்தமானவராக மேஜர் ஜெனரல் சத்யப்பிரிய லியனகே இருக்கின்றார் என இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் நவம்பர் 14ஆம் திகதி அவருக்கு 55 வயது பூர்த்தியாகின்றது. அவருக்குப் பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கவில்லையெனில் அவர் ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்படும்.

இந்தநிலையில் அடுத்த இராணுவத் தளபதி பதவிக்கு சத்யப்பிரிய மற்றும் சவேந்திர சில்வா ஆகியோருக்கிடையே பனிப்போர் நிலவுகின்றது எனக் கூறப்படுகின்றது. தற்போதைய நிலவரத்தின்படி சவேந்திர சில்வாவுக்கே அடுத்த இராணுவத் தளபதி பதவி வழங்கப்படும் வாய்ப்புக்கள் இருக்கின்றன என அரச தலைவர் செயலகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-22)

## கோத்தாவின்...

மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஸ அருங்காட்சியகத்தை அமைப்பதற்கு 3 கோடியே 39 இலட்சம் ரூபா அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பில் சிறப்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஆட்சேபனைக்கு உட்படுத்தி கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அவை இரண்டையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. சிறப்பு மேல்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள உத்தரவை ஆட்சேபனைக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரணைக்கு எடுப்பதற்கு எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிக்ளான அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோரே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

அதையடுத்து மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஸ அருங்காட்சியக நிர்மாணம் தொடர்பில், கோத்தபய ராஜபக்ஸவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு இன்று முதல் திட்டமிடப்பட்டவாறு சிறப்பு மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (எ)

## கூட்டமைப்பு...

கொழும்பு, ஜூன் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெறவில்லை. குறைந்தளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்த காரணத்தாலேயே கூட்டம் நடைபெறவில்லை என்று அறிய முடிகின்றது.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்துள்ள நிலையில் அது தொடர்பாவும், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து ஆழமானதும் ஆரோக்கியமானதுமான கலந்துரையாடலை முன்னெடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் புதுடில்லிக்கு வரவேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகர்வுகள் தொடர்பிலும் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்திருந்தார். எனினும் நேற்றுக் கூட்டம் நடைபெறாத நிலையில், அடுத்துவரும் தினங்களில் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை நேற்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த கட்சித் தலைவர்கள் கூட்டமும் நடைபெறவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை முதல் முற்பகல் வரை நடைபெற்ற காரணத்தாலேயே கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## பரந்துபட்ட...

மகிந்த ராஜபக்ச உறுதியாக உள்ளார். தற்போதைய அரசியல் களத்தில் பல மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும், இறுதித் தருணத்தில் பரந்துபட்ட கூட்டணியின் ஊடாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வேட்பாளராகக் களமிறங்குவார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிறிலங்க சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஒருபோதும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது. பரந்துபட்ட கூட்டணி நிச்சயம் வெற்றிபெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் மகிந்த ராஜபக்ச உள்ளார். பரந்துபட்ட கூட்டணி ஊடாகவே முறையான அரசு ஏற்படும்.

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தப் பொதுசன அபிப்பிராயத்தைக் கோர வேண்டும் என்று கூறப்படுகின்றது. தற்போதைய நிலையில் பொதுசன அபிப்பிராயத்தை நடத்துவதால் மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்ட முடியாது. பொதுசன அபிப்பிராயத்தின் பெறுபேறுகளைக் கொண்டு எந்தவித அதிகாரபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னேடுக்க முடியாது. நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை. தற்போதைய நாடாளுமன்றில் ஒருபோதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எந்தத் தரப்பினருக்கும் கிடைக்காது.

பொதுத் தேர்தலின் ஊடாகத் தலைமை அமைச்சராக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நியமிக்கப்படுவார். இதுவே நிச்சயம் நடைபெறும். தனி மனிதரின் தனிப்பட்ட விடயுங்கள் தொடர்பில் முக்கியத்துவம் கொடுக்காது அரசியல் கொள்கைளுக்கு நாட்டு மக்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். 2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். - என்றார். (எ)

## முன்னைய...

வாக முன்நின்று செயற்பட்டனர்.

அரசியலிலும் பொது விடயங்களிலும் அவர்களுக்கு இன,மத பேதம் எவையும் இருக்கவில்லை. ஆனால் இன்றுள்ள முஸ்லிம் தலைவர்களில் தேசிய தலைவர் என்று குறிப்பிடத்தக்க எவரும் இல்லை. தற்போதுள்ளவர்கள் குறுகிய நோக்கங்களைக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அடிப்படைவாதம் தொடர்பில் பேசி, அதற்குத் தீர்வு காண்பதை விடுத்து தமது சகாக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகினார்கள்.

நாம் இப்போது தேர்தல் காலகட்டம் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். அடுத்த அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான அரச தலைவர் தேர்தல் செயற்பாடுகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் ஆரம்பித்து டிசெம்பர் மாதமளவில் முடிவடைய வேண்டும்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பில் அண்மைக்காலமாகப் பேசப்பட்டு வருகிறது. நாம் அனைத்துக்கும் தயார் நிலையிலேயே இருக்கின்றோம். எமது வேட்பாளர் யார் என்பதைச் சரியான நேரம் வரும்போது அறிவிப்போம். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம் - என்றார். (எ)

## மகா சபையி...

அதற்கமைய செயற்படுவார்களாயின் நாடு ஒருபோதும் தவறான பாதையில் பயணிக்காது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அங்குரங்கெத்த, மாதன்வல ரஜமகா விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட தூபியில் புனித சின்னங்களை நிறுவும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அரச கொள்கையேயே நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பல உலக நாடுகளின் தற்போதைய அசாதாரண நிலமைகளைக் கவனத்தில் கொள்ளும் போது எமது நாட்டில் சகல இனத்தவர்களும், மதத்தவர்களும் சுதந்திரமாக வாழக் கூடிய சூழல் ஒன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளமைக்கு பௌத்த கோட்பாடுகளின் அடிப்படையிலான மனிதநேய வழிகாட்டுதல்களே காரணம் என்று அரச தலைவர் தெரிவித்தார்.

அஸ்கிரிய பிரிவின் மகாநாயக்கர் வரக்காகொட சிறி ஞானரத்தன நாயக்க தேரரின் தலைமையில் இந்த புண்ணிய நிகழ்வு இடம்பெற்றது. மல்வத்தைப் பிரிவின் அனுநாயக்கர் வண. திம்புல்கும்புரே விமல தம்ம தேரர், அஸ்கிரிய பிரிவின் அனுநாயக்கர் வண. ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசாநாயக்க உள்ளிட்ட பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் பெருமளவிலான பக்தர்களும் இந்த புண்ணிய நிகழ்வில் கலந்து கொண்டனர். என்றுள்ளது. (எ)

## கெருடாவிலில்...

கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றுக்குள் இருந்து ஒரு தொகுதி கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும், அதையடுத்து நடத்தப்பட்ட சோதனையில் அருகில் உள்ள காணி ஒன்றில் இருந்து ஒரு தொகுதிக் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் அந்தக் காணி உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸர் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினமும் கெருடாவில் பகுதியில் 30 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டிருந்தது. (எ-26)

## சென்.பற்றிக்ஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம்.ஜூன் 19
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப்பிரிவினருக்கான பிரிவு இரண்டுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 140 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
ஸ்கந்தவரேதயா கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரேதயா கல்லூரி அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரேதயா கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 39 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தருண் 49 ஓட்டங்களையும், டனிசியஸ் 41 ஓட்டங்களையும், டெஸ்வின் 38 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் றெக்சன், துவிசன், அனோசன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தவரேதயா கல்லூரி அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 46 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இதில் அதிகபட்சமாக றெக்சன் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டெஸ்வின் 4 இலக்குகளையும், ரவிந்து 3 இலக்குகளையும், டனிசியஸ் 2 இலக்குகளையும் சாய்த்தனர். (23)



மாகாண மட்ட பூப்பந்தில் 20 வயது பெண்கள் பிரிவில்

# பரு. மெதடிஸ்த பாடசாலை கிண்ணத்தை சுவீகரித்தது

கரணவாய், ஜூன் 19
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை.
இந்தப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையை எதிர்த்து யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மோதின.
3 தனிநபர் 2 இரட்டையர்கள் கொண்ட இந்தப் போட்டியில் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ராகவி கஜனியை 21:08, 21:09 எனவும் பிரசாந்தினி 21:19, 21:14 எனவும் எழிலரசி ஏஞ்சலினை 21:14, 21:19 எனவும் வெற்றி கொள்ள 3:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை யாழ். இந்துமகளிர் கல்லூரி பெற்றது. (108)

## ரேவடி வி.க. – நேதாஜி வி.க. இறுதிக்கு முன்னேறியது

நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் வல்வைக் குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ரேவடி விளையாட்டுக்கழகம் மற்றும் நேதாஜி விளையாட்டுக்கழக அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.
கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் ரேவடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 2 : 0 என்ற கோல்கணக்கில் ரேவடி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றெஜின்போ விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. (23)

## மன்.பற்றிமா மகா வித். வசமானது கிண்ணம்

கரணவாய், ஜூன் 19
பாடசாலைகளுக்கிடையிலான 17வயது பெண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் மாகாணச் சம்பியனாகியது மன்னார் பற்றிமா மகா வித்தியாலயம்.
இந்தப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.
இதில் மன்னார் பற்றிமா மகாவித்தியாலயம் எதிர் மன்னார் சித்தி விநாயகர் வித்தியாலயம் மோதின. 3 தனிநபர் மற்றும் 2 இரட்டையர் ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் பற்றிமா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஜென்சி நாவலவை 21:14, 21:18 எனவும் சி.சௌமியா நடாலை 21:18, 21:15 எனவும் ரி.சௌளெமியா ஹரணியை 21:4, 21:3 எனவும் வெற்றி கொண்டு 3:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று பற்றிமா மகா வித்தியாலயம் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பெற்றது. (108)



## பூப்பந்தாட்டத்தில் மன். சென்சேவியர் சம்பியனாகியது

கரணவாய், ஜூன் 19
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத்தில் 20 வயது ஆண் பிரிவில் சம்பியனாகியதுமன்னார் சென்சேவியர் ஆண்கள் கல்லூரி அணி.
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.
இந்த இறுதிப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலை அணி மோதியது. 3 தனிநபர் 2 இரட்டையர் ஆட்டங்களையும் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரு தனி நபர் ஆட்டங்களில் சென்சேவியர் கல்லூரியைச் சேர்ந்த நிஷாந்த பாலன் 21:16, 21:12 என்ற கணக்கில் சுலக்சனையும் தில்க்சன் 21:12, 21:15 எனவும் வெற்றி கொள்ள மூன்றாவது செற்றை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை சேர்ந்த செஷன் சுஜீபனை 21:18, 21:17 என வெற்றி கொள்ள 2:1 என்று இருந்தது. இதனை அடுத்து இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் நிஷாந்தபாலன், திலக்சன் இணை சுலக்சன் இணையை 21:19, 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொள்ள 3:1 என்று சம்பியனாகிது சென்சேவியர் அணி. மூன்றாமிடத்தை யாழ். இந்துக்கல்லூரி பெற்றுக்கொண்டது. (108)



## தாச்சிச் சுற்று இறுதியில் கைதடி குமரநகர் வெற்றி

கொடிகாமம், ஜூன் 19
யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுமதியுடன் வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டு கழகம் நடத்திய தென்மராட்சி ரீதியிலான தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதி போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இதில் இறுதியில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி குமரநகர் விளையாட்டு கழகம் மோதியது.
இதில் கைதடி குமரநகர் விளையாட்டு கழகம் 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியை தனதாக்கியது. இந்தப் போட்டியின் சிறந்த வீரராக குமரநகர் விளையாட்டுக்கழக அணி வீரர் கஜன் தெரிவு செய்யப்பட்டார். (159)

## அரியாலை சரஸ்வதி வாகை



யாழ்ப்பாணம்.ஜூன் 19
அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையத்தின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சிறிகலைமகள் விளையாட்டுக்கழகம் உள்ளூர் ரீதியாக நடத்திய மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் அரியாலை திருமகள் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சரஸ்வதி விளையட்டுக்கழக அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக சத்தியேந்திரா 19 ஓட்டங்களையும், டினேஸ் 12 ஓட்டங்களையும் டிலான் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கோகுலன் 3 இலக்குகளையும், டக்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு களமிறங்கிய அரியாலை திருமகள் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அணி சார்பில் கோகுலன்32 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் டினேஸ் 3 இலக்குகளை வீழ்த்தினார். (23)

## உதயசூரியன் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்.ஜூன் 19
நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டநேரமுடிவில் 14 : 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி கிண்ணத்தை சுவீகரித்தது. (23)



## ஒருநாள் போட்டியில் மோர்கன் சாதனை

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் ஆப்கான் - இங்கிலாந்து அணி மோதியது. இதில் இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடரில் 25 ஆறு ஓட்டங்களை அடித்து ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங்ஸில் அதிக ஆறு ஓட்டங்களை அடித்த அணி என்ற பெருமையைப் பெற்றது.
இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடரில் 2007ஆம் ஆண்டு 22 ஆறு ஓட்டங்களை அடித்திருந்தமையே முன்னர் அதிகமாகக் காணப்பட்டது. இதனை நடப்பு உலகக் கிண்ணத்தில் தற்போது முறியடித்துள்ளது.
இதில் இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் 17 ஆறு ஓட்டங்களை விளாசியிருந்தார். அவர் இந்தப் போட்டியில் 71 பந்துகளில் 148 ஓட்டங்களைக் குவித்தார்.
மோர்கன் 17 ஆறு ஓட்டங்களை அடித்ததன் மூலம் ஒருநாள் போட்டியில் அதிக ஆறு ஓட்டங்கள் அடித்த வீரர்கள் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன் ரோகித் சர்மா ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 16 ஆறு ஓட்டங்களும், வில்லியர்ஸ் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 16 ஆறு ஓட்டங்களும், கெய்ல் சிம்பாப்வேவுக்கு எதிராக 16 ஆறு ஓட்டங்களையும் விளாசியிருந்தனர். இந்த சாதனையை இவர் உடைத்தெறிந்தார்.
இதில் துரதிர்ஷ்டம் என்னவெனில் உலகின் சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவரான ரசிட் ஹானின் பந்து வீச்சை இங்கிலாந்து வீரர்கள் துவம்சம் செய்தனர். அவர் வீசிய 9 பந்துப்பரிமாற்றங்களில் எந்தவித இலக்குகளையும் கைப்பற்றாது 110 ஓட்டங்களை வாரி வழங்கியிருந்தார். அதில் 11 ஆறு ஓட்டங்கள் அடிக்கப்பட்டிருந்தன. இது அவரது உலகக் கிண்ணப் போட்டியில் மிக மோசமான பந்து வீச்சாகப் பார்க்கப்படுகின்றது.

கோபா கால்பந்து தொடர் தென்னாபிரிக்காவில் இடம்பெற்று வருகின்றது. இதில் ஒரு போட்டியில் போது கலந்து கொண்டுள்ள பிரேசில் நாட்டு ரசிகர்கள் வர்ணங்களை பூசி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் காட்சி.



## சகிப் அல் ஹசன் புதிய சாதனை




நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில் பங்களாதேஷ் அணியின் வீரர் சகிப் அல் ஹசன் சதம் கடந்து புதிய சாதனையைப் படைத்தார். இந்த உலகக் கிண்ணத்தில் அவரது இரண்டாவது சதம் இதுவாகும். இவர் இங்கிலாந்துக்கு எதிராக ஏற்கனவே 121 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.
இவர் ஒருநாள் போட்டியில் 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த பங்களாதேஷின் 2ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதில் 9 சதமும், 44 அரை சதமும் அடங்கும்.
தமிம் இக்பால் 6,743 ஓட்டங்களை எடுத்து முதல் இடத்தில் உள்ளார்.

# மோர்கன் காட்டடி இங். இலகு வெற்றி



இனி வரும் எந்தப் போட்டிகளிலும் தோல்வியடையக் கூடாது என்பது போல் இங்கிலாந்து அணியினர் ஆடியிருந்தனர். அணித் தலைவர் மோர்கனின் ஆட்டம் நெருப்பாக இருந்தது.
நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து - ஆப்கான் அணிக்ள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 150 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆப்கான் அணிக்கு எதிராக பெரியதொரு இலக்கை நிர்ணயித்து ஓட்ட சராசரியில் முன்னிலை பெறும் முனைப்பில் இங்கிலாந்து துடுப்பாட்டத்தை தெரிவு செய்திருந்தது. இன்று அணியில் ரோய்க்கு பதிலாக வின்ஞ் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்பட்டார். பெயர்ஸ்ரோ. ரூட் இணை அணிக்கு பலம் சேர்த்தது. பெயர்ஸ்ரோ 90 ஓட்டங்களையும், ரூட் 88 ஓட்டங்களையும் அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். பெயர்ஸ்ரோவின் ஆட்டமிழப்பு ஆப்கான் அணிக்கு ஆபத்தாக முடிந்தது. இயன் மோர்கன் களமிறங்கி ஆப்கான் அணியை துவம்சம் செய்தார். அவர் 71 பந்துகளில் 17 ஆறு ஓட்டங்கள் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 148 ஓட்டங்களைக் குவித்தார். அத்துடன் ஒரு நாள் போட்டிகளில் அதிக ஆறு ஓட்டங்களை எடுத்த வீரர் எனும் பெருமையையும் அவர் பெற்றார். அவரைத் தொடர்ந்து அடுத்த அதிரடி காட்டினார் மொய்ன் அலி. அவர் 9 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 31 ஓட்டங்களைக் குவித்தார். இந்த இன்னிங்ஸில் 25 ஆறு ஓட்டங்கள் பெறப்பட்டன. இது ஒரு அணி ஒரு இன்னிங்ஸில் பெற்ற அதிக ஆறு ஓட்டங்கள் ஆகும். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 397 ஓட்டங்களைக் குவித்தது. பந்து வீச்சில் ரசிட்கான் சொதப்பியிருந்தார். நபி, சட்ரன் சிறப்பாக வீசினர்.
இமாலய இலக்கை நோக்கிக் களமிறங்கிய ஆப்கான் அணிக்கு ஆர்ச்சர் அதிர்ச்சி கொடுத்தார். இருந்தும் ஆப்கான் பாராட்டியே ஆக வேண்டும் மத்திய தர வரிசை வீரர்கள் போராடியிருந்தனர். மகமத்துல்லா சகிடி, ஆப்கன் ஆகிய வீரர்கள் அணிக்கு பலம் சேர்த்தனர். இங்கிலாந்திடம் மண்டியிடாது இறுதி வரை போராடியிருந்தது ஆப்கான் அணி. நிரணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. ஆப்கான் அணி நடப்பு உலகக் கிண்ணத்தில் இதுவரை ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை . ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் தெரிவு செய்யப்பட்டார்.

### இன்றைய போட்டி




## இலங்கை அணிக்கு வழங்கப்பட்ட ஆடுகளங்கள் திருப்தியில்லைதான்

*அர்ஜுன ரணதுங்கவும் சுட்டிக்காட்டு*

இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆடுகளங்கள் தொடர்பில் திருப்தியடைய முடியாது தான் என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் உலகக் கிண்ண சம்பியன் தலைவருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக் கெட் போட்டித் தொடரில் இலங்கைக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ள ஆடுகளங்கள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்தது இலங்கை அணி.
இது குறித்து அர்ஜுன ரணதுங்க தெரிவிக்கையில்;
இந்த விவகாரம் தொடர்பில் தற்போதைய கிரிக்கெட் சபை எவ்வித எதிர்ப்பையும் வெளியிடாது அமைதி காத்து வருகிறது. கிரிக்கெட் போட்டிகளில் வெற்றியீட்டுவது, தோல்வியடைவது வழமையானது. எனினும். இலங்கை கிரிக்கெட் அணி பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.
அணியின் முகாமையாளர் அசந்த டி மெல் கூறுவது போன்று இலங்கைக்கு ஆடுகளங்களை வழங்குவதில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது.
இந்த விடயம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்துமாறு ஐ.சி.சி.யிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்படவேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சரேனும் இது குறித்து முறைப்பாடு செய்ய வேண்டும்.
நாடுகளுக்கு நாடு மைதானத்துக்கு மைதானம் ஆடுகளத்தின் தன்மை பெரிய மாற்றங்களுடன் காணப்படுகிறது. இதனால் அணிகள் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன. இலங்கை ஒரு புறம் தங்களது மோசமான துடுப்பாட்டத்தால் தோல்வி கண்டு வந்தாலும் மைதானத்தின் குளறுபடிகளும் இருக்கத்தான் செய்கின்றன - என்றார்.



**வீடு வாடகைக்கு உண்டு**

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு AC, சமையலறை வசதியுடன் குறுகிய கால வாடகைக்கு உண்டு.

**071 513 0100** (AKN/736) (11.17)

**FLC FRENCH LANGUAGE CENTRE**

பிரெஞ்ச்

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 22.06.19 சனி காலை 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 24.06.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

# அதிக தூர 6 ஓட்டங்கள்

நடப்பு உலகக் கிண்ணத்தொடரில் நேற்று இடம்பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான போட்டியில் மேற்கிந்திய வீரர்களான ஹோல்டர், ஹிட்மெயர் ஆகியோர் இந்த உலகக் கிண்ணத்தில் அதிக தூரம் ஆறு ஓட்டங்களை அடித்து அசத்தியுள்ளனர். அவர்கள் 103,104 மீற்றர்களுக்கு ஆறு ஓட்டங்களை அடித்து நடப்பு உலகக் கிண்ணத்தில் அதிகூடிய தூரம் ஆறு ஓட்டங்களை அடித்த வீரர்கள் என்ற பெருமையைப் பெற்றனர். அவர்களுடன் அந்த அணியின் வீரர் ரசல் கடந்த போட்டியில் 105 மீற்றர் ஆறு ஓட்டம் அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



**சிறுநீரகம் தேவை**

$O^+$ இரத்தவகை சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. உதவி செய்ய விரும்புவோர் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும். (CS/26123) (11.17)

**077 003 5285, 077 844 8708**

**விற்பனைக்கு**

தரமான சிமெந்துக்கற்கள், தூண்கள் விற்பனைக்கு உண்டு.

**076 760 3066, 075 039 1980**



கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் ஜப்பான் - சிலி அணிகள் மோதின. இதில் கலந்து கொண்ட ஜப்பானிய ரசிகர் ஒருவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்.




**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 643
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.18

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,135,210/-

வெற்றி இலக்கங்கள்: 01 25 37 64 K

தொ.பே: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 990
சீட்டிழுப்பு திகதி 2019.06.17 திங்கட்கிழமை

Z 06 26 56 59

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,179,004/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 18.06.2019 | 2541 | சிகப்பு |

சிம்மம்

வெற்றி இலக்கங்கள்: 01 26 31 49

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,312,878 /=

19.06.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW

**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 780
சீட்டிழுப்பு திகதி 18.06.2019

வெற்றி இலக்கங்கள்: 04 27 47 56 V

அடுத்த வெள்ளி கிழமைக்கான ஜக்பொட் ரூ. 27, 463,416/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்

**எதிர்வரும் ஜூன் 22ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 11.30 வரை**

**Tilko Jaffna City Hotel-Jaffna**

பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப்பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.

அனுமதி இலவசம்

முன்பதிவுகளுக்கு:- **021 222 1455 / 0777 822 014 / 0777 105 205**

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19 .06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.